Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

தமால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 9
இதழ் 359
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பிலவங்க தை 24 ஜூல்ஹஃ 7 புதன்கிழமை (7-2-68)

எகடொக்ஸ் - 50
அதிகசக்தி வாய்ந்த சர்வகிருமி நாசினி
" எகடொக்ஸ் - 50 " ஐ
உங்கள் கமத்தில் பாவித்து
அதிக இலாபத்தைப் பெறுங்கள்.
விலையோ மிகவும் மலிவு
சக்தியோ மிகவும் அதிகம்
விநியோகஸ்தர்கள்:
சிலோன் மேர்ச்சன்ஸ்-
லிமிற்ரெட்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 234

விலை நிர்ணயம் பற்றி சர்வதேச ஒப்பந்தம் தேவை

புதுடில்லி மகாநாட்டில் ஜே. ஆர். யோசனை

அபிவிருத்தி அடையாத நாடுகள் பற்றிஸ்திரமான முயற்சி வேண்டும் என்கிறார்

புதுடில்லி, பெப். 6

அபிவிருத்தியடையாத நாடுகள் ஏற்றுமதி செய்யும் பொருட்களில் அதிக லாபத்தை அடைய முடியாதிருப்பதாகவும் இறக்குமதி செய்யும் பொருட்களில் அதிக செலவை ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலையிலிருப்பதாகவும் இந்த நிலை மாற்றப்பட்டு அபிவிருத்தியடையாத நாடுகள் பாதிக்கப்படாதவகையில் ஸ்திரமான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு நல்லமுறையில்செயல்படுத்தப்பட வேண்டுமென புதுடில்லியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஐ. நா.வின் வர்த்தக அபிவிருத்தி சம்பந்தமான இரண்டாவது சர்வதேச மகாநாட்டில் இலங்கைக் குழுவின் தலைவரான இலங்கை ராஜாங்க அமைச்சர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா எடுத்துக் கூறினார்.

ஆசிய நாடுகளின் சார்பில் கலந்து கொண்ட பிரதிநிதிகளுள் முதலாவதாகப் பேசிய திரு. ஜெயவர்த்தனா இவ்வித கமச்சீரின்மையை சீர்படுத்துவதற்காக பண்டங்களின் விலைகளை ஒரே சீர்படுத்தக்கூடிய ஒரு சர்வதேச ஒப்பந்தம் ஏற்பட வேண்டுமென அப்பிராயம் வெளியிட்டார்.

பிரிட்டனின் கருத்து

பிரிட்டிஷ் குழுவின் தலைவர் அந்தோனி குரொஸ்லாண்ட் பேசுகையில் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு சாதகமாக மற்ற நாடுகள் தாராள வர்த்தகக் கொள்கையைக் கடைப்பிடிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

பிரெஞ்சு பிரதிநிதி திரு. தெபரே, மேற்கு ஜெர்மன் பிரதிநிதி திரு. ஷீலோ ஆகியோர் அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு தமது நாடுகள் உதவ முன்நிற்பதாகத் தெரிவித்தனர்.

யு தாண்ட் நாளை வருகிறார்

நியூயோர்க், பெப். 6

இம்மகாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் இன்று இங்கிருந்து புறப்பட்டார். இவர் வரும் வியாழக்கிழமை புதுடில்லி சேருவார்.

புதுடில்லியில் இம்மகாநாட்டில் கலந்து கொண்ட பின்னர் மாஸ்கோவுக்குச் செல்வாரெனவும் அங்கு ரஷ்யப் பிரதமர் திரு. கொஸிஜினுடன் பேச்சுவார்த்தை நடத்துவாரெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

நீரியல் ஆராய்ச்சி

உடுப்பிட்டி, செவ்

உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியைச் சேர்ந்த விஞ்ஞானவகுப்பு மாணவர்கள் முப்பது பேரும், மூன்று மணவிகளும் வல்லையில் மூகாமிட்டு நீரியல் ஆராய்ச்சி செய்தனர்.

இந்நீரியல் ஆராய்ச்சியை மேற்கூடி கல்லூரி அதிபர் எஸ். எஸ். செல்வத்துரை ஆரம்பித்து வைத்து ஆராய்ச்சிச் செலவுக்கென அரசாங்கத்தால் வழங்கப்பட்ட உபகார நிதியைக் குழுத்தலைவரிடம் கையளித்தார்.

சாயிபாபா வருகிறார்

யாழ்ப்பணம், புதன்

இந்தியாவைச் சேர்ந்த பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா அடுத்த மாதப் பிற்பகுதியில் இலங்கைக்கு விஜயம்செய்யவிருப்பதாகத் தெரிகின்றது. மார்ச் மாதப் பிற்பகுதியில் அல்லது ஏப்ரல் மாத முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யும் இவர் இங்கு எட்டுத் தினங்கள் தங்கியிருப்பாபாரென்றும், இதில் இரு தினங்களை யாழ்ப்பாணத்தில் கழிப்பாரென்றும் தெரிகின்து.

எதிர்வரும் மே மாதம் 16-ம் திகதி முதல் 18-ம் திகதிவரை ஸ்ரீ சத்திய சாயிபாபா தலைமையில் அகில உலக சாகி சமித்தி மகாநாடு பம்பாயில் நடைபெறவிருக்கின்றது. இதற்கு முன்னர் இலங்கைவரும் இவர் கொழும்பு, கண்டி, மட்டக்களப்பு, திருமலை ஆகிய இடங்களுக்கும் விஜயம் செய்யலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

[கா. நி]

உபசபாநாயகர் இன்று யாழ்ப்பாணம் வருகிறார்

யாழ்ப்பாணம், புதன்

ஜனப்பிரதிநிதிகள் சபை உபசபாநாயகர் சேர்ரஸீக் பரீத் இன்றுகாலை யாழ்ப்பாணத்துக்குவிஜயம்செய்யவிருக்கின்றார்.

இங்கு நடைபெறவிருக்கும் 1400-ம் ஆண்டு குர்ஆன் விழாவில் கலந்துகொள்ளும்பொருட்டு இங்குவிஜயம் செய்யும் இவர் இன்று காலை விமானம் மூலம் இங்கு வருகின்றார். இவருடன் இரு முஸ்லிம் எம்.பிக்களும் வருவார்கள் எனத் தெரியவருகிறது.

இரு தினங்கள் சேர்ரஸீக் பரீத் இங்கு தங்கியிருக்கும் போது பல முஸ்லிம் சங்கங்களு அவருக்கு வரவேற்பளிக்கும்.

[கா. நி]

மலேரியா தடுப்பு பற்றி கணிப்பு

பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அமைச்சர் விஜயம்

கொழும்பு, செவ்.

மலேரியாவை எதிர்த்து நாட்டின் பல பகுதிகளிலும் நடைபெற்றுவரும் தடுப்பு நடவடிக்கை சம்பந்தமான மதிப்பீடுஒன்றுநடத்த படப்விருக்கிறது. சுகாதாரப் பகுதியால் நடாத்தப்படவிருக்கும் இத்த மதிப்பீடு மலேரியா இங்கு பரவாமல் தடுப்பதற்கான முன் ஏற்பாடாகஇருக்குமெனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் விஜயம்

மலேரியா அதிகமாகப் பரவி வருவதாகக் கணிக்கப்பட்டுள்ள இடங்களுக்குசுகாதார அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகா விஜயம் மேற்கொள்ள விருக்கிறார். புத்தளம், எலகரா ஆகிய பகுதிகளுக்கு இன்று சுகாதார அமைச்சர் விஜயம் மேற்கொண்டார். இவர் இப்பகுதிகளில் இரண்டு நாட்கள் தங்கி நிலைமையை ஆராய்வார்,

அமைச்சருடன் சுகாதார இலாகா உதவி டைரக்டரும் செல்கின்றார்.

4000 பேருக்கு வேலை கிடைக்கும்

கொழும்பு, செவ்.

இலங்கையில் இன்னும் இரு வருடங்களில் மேலும் 4 கோடி யார் துணி தயாரிக்கப்படவிருக்கிறது. இங்கு பிறநாடுகளின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட விருக்கும் 50 மின்தறி நெசவு யந்திரசாலைகள் இதனை சாத்தியமாக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது.

இந்த மின்தறி நெசவு இயந்திரசாலைகள் ஆரம்பிக்கப்பட்டதும்4000 பேருக்கு வேலைகிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

50 மின்தறி நெசவு யந்திரசாலையில் 2400 மின் தறிகள் வேலைசெய்யும்.

துண்டுப் பிரசுரங்களை பொலிஸ் கோஷ்டி கைப்பற்றியது

காங்கேசன்துறை, செவ்.

கைக்குண்டும் களவுச் சாமான்களும் இருப்பதாகத் தகவல் கிடைத்ததின் பேரில் சென்ற பொலிஸ் கோஷ்டி இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் துண்டுப் பிரசுரங்களைக் கைப்பற்றியது.

காங்கேசன்துறை குற்றத் தடுப்புப் பகுதி இன்ஸ்பெக்டர் திரு வி செல்லையா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி இத்து

[8ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

தேவை

பீடி வியாபாரம் செய்வதற்கு அனுபவமுள்ள 30 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் தேவை. தெரிவுசெய்யப்படுவோர் 500 ரூபா பிணைப்பணம் கட்டவேண்டும். சாமி அன் சன்ஸ் 29, ஸ்ரான்லி ரோட், யாழ்ப்பாணம். போன்: 7174 1931

பைக்கற் போடக்கூடிய பெண்பிள்ளைகள் தேவை. கடிதமூலம் அல்லது நேரில் 10 முதல் 11 மணிக்கு வரவும். அலன் டீ கொம்பனி, 25/1 செட்டித்தெரு, நல்லூர். 1883

விற்பனைக்கு

வீடு:

மூன்று பரப்பில் புதிதாகக் கட்டிய உப்பரிகையுள்ள மாடி வீடு யாழ்ப்பாணம் புங்கங்குளம் ரோட்டில் நாகராஜா லேனில் விற்பனைக்குண்டு. மின்சாரம், குழாய்த் தண்ணீர், டிறெயினேச் குளிக்கும் அறை வசதிகளுடன் மாடியிலும், கீழ்வீட்டிலும் ஆறு விசாலமான அறைகளும் கராச்சும் உண்டு. வாங்குவோர்க்குக் கடன் வசதியுமுண்டு. விரும்புவோர் பார்த்துவிட்டில் விசாரிக்கவும். விபரங்கட்கு திரு. ஏ. நாகராசா, 154, W. A சில்வமாவத்த வெள்ளவத்தை. 1882

காணி

யாழ்ப்பாணம் — கண்டி பிரதான ரோட்டில் சாவகச்சேரி மதுபரிபாலன கந்தோருக்கு அருகாமையில் Excise Station கட்டிடங் கட்ட, குடியிருக்க வசதியான தென்னங்காணி சுற்றுக்கட்டுக் கிணற்றுடன் நிலப்பரப்பு 12 ஒருமித்தேனும் அல்லது அதில் அரைவாசியேனும் விலைக்கு விற்க இருக்கின்றது. விரும்பியவர்கள் தொடர்பு கொள்ளவும்: மூ. நா. மார்க்கண்டு. ஏல விற்பனையாளர், சாவகச்சேரி. 1852

கோழி:

முட்டை இடும், முட்டை இடும் பருவமுள்ள கோழிகள் விற்பனைக்குண்டு சிவாமிப்பிள்ளை, மாணிக்கவாசா, மின்சாரநிலைய வீதி, பருத்தித்துறை. 1869

காணவில்லை

T. G. மெண்டிஸ் அப்புகாமி என்பவர் நாவலர் வீதி, கொழும்புத்துறை புங்கங்குளம் வீதியில பாண் கணக்கெழுதும் புஸ்தகத்தை தவறவிட்டுவிட்டார். கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்திற்கு தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். 288, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 1930

கல்வி

ஜி. சி. ஈ., கலை/விஞ்ஞானம் பயிற்சிபெற்ற பட்டதாரிகளால் வகுப்புகள் நடாத்தப்படும். எங்கள் மாணவர்கள் நூற்றுக்கு நூறு சித்தியடைகிறார்கள். யூனிடெட் இன்ஸ்டிட்டியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறைவீதி நல்லூர், யாழ்ப்பாணம்/179, பிரதான வீதி, கல்முனை /வவுனியா/ மன்னார்/ வாழைச்சேனை. 1867

ஜி. சி. ஈ. (உயர்தரம்)- கலை, விஞ்ஞானம், விசேஷ பட்டதாரிகளால் வகுப்புகள் நடாத்தப்படும். தங்குமிடுதி வசதிகள் உண்டு. யூனிடெட் இன்ஸ்டிட்டியூட்ஸ், நெல்லியடி, கரவெட்டி/107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்/179 பிரதான வீதி, கல்முனை. 1866

பிரதமருக்கு மகஜர்

புன்னாலைக்கட்டுவன், செவ்வாய்

அரசாங்கம் வடபகுதியிலுள்ள ஐந்து தமிழ் பௌத்த பாடசாலைகளையும் கைவேற்று நடத்தாவிடில், அவற்றை எம்மிடம் ஒப்படைத்தால், நாம் நடாத்தமுடியும் என்று அகில இலங்கைப் பௌத்த காங்கிரஸ், பிரதமர் திரு டட்லி சேனநாயக்காவுக்கு அனுப்பியுள்ள மகஜர் ஒன்றில் கூறியிருப்பதாக யாழ் பௌத்த தமிழ்ச் சங்கத் தலைவர் திரு எம் வைரமுத்து தெரிவித்தார். அரசாங்கத்தின் பௌத்த கல்விக் கொள்கையும் இம்மகஜரில் கண்டிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

அனலைதீவு ஆசிரியர் கஷ்டம்

அனலைதீவு, செவ்வாய்

அனலைதீவில் கடமையாற்றும் வெளியூர் ஆசிரியர்கள் போக்குவரத்து வசதியும் இருப்பிட வசதியும் இல்லாதது குறித்து அவர்கள் கவலையுற்றிருக்கின்றனர் இங்கு கடமை புரியும் பிறவூர் ஆசிரியர்கள் தங்களது வார ஓய்வு நாட்களைத் தமது சொந்த ஊர்களில் செலவிட முடியாத நிலையிலுமிருந்து வருகின்றனர். போக்குவரத்து வசதியீனமே இதற்குக் காரணமாகும்.

அனலைதீவிலிருந்து பிற்பகல் 1-45க்குப் பின்னர் ஊர்காவற்றுறைக்கு மோட்டார் படகுச் சேவை இல்லையாதலால் கடைசிவேலை நாளன்று பாடசாலை முடிந்த பிறகு மாலை 3-30க்குப் பின்னர் ஆசிரியர்கள் தமது சொந்த ஊர்களுக்குப் புறப்பட முடியாமல் இருக்கிறதாம். இதனால் ஆசிரியர்கள் போயா தினத்துக்கு முதல்நாள் தமதுஊர் புறப்பட்டு போயா தினத்தன்று மாலை இங்கு வந்து சேர வேண்டியுள்ளதாம். இங்கு நிலவிவரும் ஆசிரியர் பற்றாக்குறை நிலைமை நீடித்து வருவதற்கு இதுவும் ஒரு முக்கிய காரணமெனக் கூறப்படுகிறது.

—

குரும்பசிட்டி, செவ்வாய்

வலிகாமம் வடக்கு காரியாதிகாரிப் பிரிவுவிளையாட்டுத்துறை அதிகாரியினால் ஒழுங்கு செய்யப்பட்ட நீச்சல் பயிற்சி வகுப்பு கீரிமலையில் இருதினங்கள்நடைபெற்றது. சுமார் 100 பேர் வரையில் பங்கு பற்றிய இப் பயிற்சி வகுப்பில் இலங்கை தேசிய நீச்சல் பயிற்யாளர் திரு. ஹே. ரெடமன் கலந்து கொண்டு பயிற்சியளித்தார்.

வெளிவந்துவிட்டது

வர்ணப் படங்களுடன் கூடிய

எட்டாந்தரப் புவியியல்

வட-இலங்கைத் தமிழ் நூற் பதிப்பகம்
சுன்னாகம் 429

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயாதினங்களில்4காட்சி
7வது வாரம்!
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா
நடித்த
காவல்காரன்

நியூ காலிங்கஸ்
(இணுவில்)
தினசரி 6-30, 10-00 மணி
விடுமுறைதினங்களில் 2-30
ஆனந்தன்— அசோகன்
நடித்த
விஜயபுரி வீரன்

MANOHARA
JAFFNA
Daily at 4-45,7-00, 9-45P.M
Poya days 10-30 A. M.
Rock Hudson
Claudia Cardinalle
in
BLINDFOLD
[Color Scope]

REGAL JAFFNA
Daily at
4-40, 7-00, & 9-45 p.m
Jeff Chandler
Barbara Shelley
in
A STORY of DAVID
[Eastman Color]

இருபத்தேழாவது மகாநாடு

யாழ்ப்பாணம், செவ்.

ஐக்கிய இலங்கை ஸ்தல ஸ்தாபன தொழிலாளர் சங்க யாழ் மாவட்ட கிளையின் 27-வது மகாநாடு பருத்தித்துறை நகரசுத்திக் தொழிலாளர் சனசமூக நிலையத்தில் திரு ஐயம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது

இக் கூட்டத்தில் கலந்து கொண்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். மாணிக்கவாசகர் ஸ்தலஸ்தாபனங்களின் சட்ட திட்டங்களை திருத்தி அமைக்கும் வரை தொழிலாளர்களின் நியாயமான கோரிக்கைகளை வழங்குவது கஷ்டமென்று கூறினார்.

புதிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு எஸ் முருகவேள், நல்லூர் கிராம சபை தலைவர் திரு பொ குமாரகுலசிங்கம் ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

புதுவருட உத்தியோகத்தர்களாக கீழ்க்காணுவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: திரு. இ. ஐயம்பிள்ளை, உபதலைவர்: திரு எஸ். முருகன். காரியதரிசி: திரு அ இராமன், தனதிகாரி: திரு. கு. அம்பாகி

காணி ஏலவிற்பனவு

1968-ம் ஆண்டு மாசி மாதம் 10-ம் திகதி [10-2-68] சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் பின்னால் விபரிக்கப்படும் ஆதனம் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். இக்காணி திருநெல்வேலி இறை ''நாவலடி'' நிலப்பரப்பு (4 1/2) கல் வீடு; போட்டிகோ; கிணறும் இன்னும் திருநெல்வேலி அரசினர் சந்தை பரமேஸ்வராக்கல்லூரி பலாலி ரோட் சமீபமாக உள்ளது.

ஒப்பம்
தா. செல்லையா
ஏல விற்பனையாளரும் கொமிஷனர்
விலைமதிப்பாளர்
435

—

முல்லைத்தீவு செவ்.

முல்லைத்தீவுப் பகுதியில் நிரப்புநிலையத்தில் மோசடி நடந்ததாகக் கிடைத்த புகார்கள் மீது இலங்கைபெட்ரோலியம் காப்பரேஷன் மேற்படி நிலையத்தில் உள்ள பெட்ரோல், மண்ணெய்த் தாங்கிகளை சீல்பண்ணி உள்ளதால் தற்போது மண்ணெய், பெட்ரோல் ஆகியவற்றிற்கும் பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

தேவை

மரவள்ளிக் கிழங்கு

மரவள்ளித் தோட்டக்காறரிடமிருந்து ஒரு நாளில் 500 முதல் 1000 ரூத்தல்வரை வாங்கப்படும்.

ஸ்ரீ லங்கா ரப்பியோகா புறடக்ஸ்

தொடர்பு கொள்ளுங்கள்:
ஆர். சின்னத்தம்பி
2-ம் வட்டாரம்
முள்ளியவளை
அல்லது
சுந்தரம் பிறதர்ஸ்
78, மின்சாரநிலைய வீதி — யாழ்ப்பாணம்.

கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] மைலன் [ஜிந்துப்பிட்டி]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்] விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
மொடர்ன் [பதுளை] ராஜ் [நீர்கொழும்பு]

ரவிச்சந்திரன், கல்பனா, நாகேஷ்
நடித்த



மதராஸ் To பாண்டிச்சேரி

ராதா மணிமார்க்

சந்தனாதித் தைலம்

கூந்தல் உதிர்வதையும், இளநரையையும் தடுத்து, கூந்தலை நீண்டதாகவும், அடர்த்தியாகவும், பளபளப்பாகவும் வளரச் செய்யும்.

தினந்தோறும் தலையில் தேய்த்துவருவதனால் தலையிடி, கபாலஇடி, ஓயாத தும்மல், பீனிசம், கண்களிலிருந்து நீர் வடிதல், நித்திரையின்மை முதலிய சிரநேத்திர நோய்களைக் குணப்படுத்தும். அநேக விலை உயர்ந்த மூலிகைகளைச் சேர்த்துத் தயாரிக்கப்பட்ட ஓர் ஒப்பற்ற கூந்தல்தைலம்.

எங்கும் கிடைக்கும்

தயாரிப்பாளர்கள்:-
ராதா பெர்பியூமறி அன் ராதா புறடக்ஸ்
(Radha Perfumery & Radha Products)

ஏகவிநியோகஸ்தர்கள்:-

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(மருந்து, மருந்துச்சரக்கு, வாசனைதிகள் இறக்குமதியாளர்களும் மொத்த, சில்லறை வியாபாரிகளும்.)

8, கே. கே. எஸ். ரோட். பெரியகடை, யாழ்ப்பாணம்.
''பாலேந்திரா பில்டிங்'' 160, செட்டியார் தெரு, கொழும்பு-11.
போன்: 541 Residence: 7068

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைகோனநகரம் சிதைந்தது; 3 லட்சம் மக்கள் வீடிழந்தனர்; பாலம் தகர்ந்தது

வியட்னமில் நீடிக்கும் கடும் சண்டை

லண்டன், பெப்ரவரி 6

வியட்னமில் தொடர்ந்து இன்று எட்டாவது நாளாகக் கடும் சமர் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தக் கடும் போரில் தென் வியட்னமில் சுமார் 3 லட்சம் மக்கள் வீடிழந்துள்ளனர். 100 அடி பாலம் ஒன்று வியட்காங்கியரால் தாக்கப்பட்டதால் மக்களுக்கும் பாதுகாப்புப் படையினருக்குமான தொடர்புகள் துண்டிக்கப்பட்டுள்ளன.

இந்தக் கடும் போரில் பீரங்கிகளும் ராக்கெட்டுகளும் பெருமளவு உபயோகிக்கப்பட்டதால் அதிக சேதம் ஏற்பட்டுள்ளதாகவும் அழகான நகரமென வர்ணிக்கப்படும் சைகோன் நகரம் சிதைவுற்றுக்காணப்படுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. சைகோனில் நிலைமை மோசமாகிக் கொண்டிருப்பதாகக் கிடைத்த செய்தியொன்று கூறுகிறது.

ரஸ்க் கருத்து

'வியட்னம் போரை முடிவுக்குக் கொண்டுவருவதில் கம்யூனிஸ்டுகளுக்கு அக்கறையில்லை' என அமெரிக்க வெளியுறவு அமைச்சர் திரு. டீன் ரஸ்க் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளார். ஹனோய் மீதான குண்டு வீச்சை மட்டுப்படுத்தியுள்ளபோதும் போர் இவ்விதம் நடைபெறுவது இந்த நோக்கத்தை எடுத்துக் காட்டுவதாக அவர் தெரிவித்தார்.

அறிய முடியவில்லையாம்

வியட்காங்கியரின் தாக்குதல் சம்பந்தமாக அமெரிக்க படைத்தளபதியொருவர் கருத்துத் தெரிவிக்கையில், வியட்காங்கியர் எப்பகுதிகளைத் தாக்க முனைந்துள்ளார்களென்பது தெரியமுடியாதிருப்பதாகத் தெரிவித்தார்.

மக்கள் படை

வியட்காங்கியரின் புதிய தாக்குதல்களைச் சமாளிக்க இப்போது தென்வியட்னமில் மக்கள் படையொன்று திரட்டப்பட்டுவருவதாக ஒரு செய்தி கூறுகிறது.

தமிழக

இரு மொழித் திட்டம் பற்றி தேசாய் கருத்து

அகமதாபாத், பெப். 6

மொழிச் தகராறு விரைவில் தீர்ந்துவிடுமெனவும் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பாரத துணைப்பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் அகமதாபாத்தில் தெரிவித்தார்

தமிழகத்தின் புதிய இருமொழித்திட்டம்பற்றி அவர் கருத்துதெரிவிக்கையில் அத்திட்டம் நாட்டின் நன்மைகேற்றதல்ல என்பதைத் தாம் ஒப்புக் கொள்வதாகவும் இதுபற்றி ஆராயப்பட விருப்பதாகவும் கூறினார்.

'1971-ம ஆண்டு வரை பொறுத்து பார்க்கவேண்டும்'

பிரிட்டிஷ் துருப்புகள் வாபஸ் பற்றி ஆஸ்திரேலிய அமைச்சர்

சிங்கப்பூர், பெப். 6

தென்கிழக்காசியாவில் உள்ள பிரிட்டிஷ் துருப்புக்கள் வாபஸ் பெறப்படுவது சம்பந்தமாக சிங்கப்பூருக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் திரு. ஹாஸ்லெட் கருத்துவெளியிடுகையில் 1971-ம் வருட இடைவெளிக்குள் என்ன நடக்கிறதென்பதைக் கவனித்தபின்னரே இதுபற்றி தீர்க்கமான ஒரு முடிவு சொல்லலாம் எனத் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் துருப்புகள் வாபஸ் பெறப்படுவது சம்பந்தமாகவும் இதுதொடர்பான விஷயங்கள் சம்பந்தமாகவும் தாம் சிங்கப்பூர் அரசாங்கத்திடமிருந்து ஏராளமான தகவல்கள் அறிந்துகொண்டதாகவும் ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் கூறினார்.

திரு ஹாஸ்லெட் சிங்கப்பூர் விஜயத்தை முடித்துக்கொண்டு மலேஷிய அரசாங்கத்துடன் இதுபற்றிய பேச்சுவார்த்தைகள் நடத்த கோலாலம்பூருக்கு இப்போது சென்றுள்ளார்.

'முப்படைகளையும் வலுபபடுத்த இயன்றதெல்லாம் செய்வோம்'

பாரதப்பிரதமர் அறிவிப்பு

போட்பிளேயர், பெப். 6

'பாரதத்தின் முப்படைகளையும் வலுப்படுத்த இயன்றதனைத்தும் செய்வோம்' என பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இங்கு தெரிவித்தார்.

அந்தமான், நிக்கோபார் தீவுகளுக்கு விஜயம் செய்த திருமதி இந்திராவுக்கு போட்பிளேயரில் அளிக்கப்பட்ட பெரும் வரவேற்புக்கு நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

இத்தீவு மக்களிடையே இருந்து வரும் ஐக்கியம் என்னைப் பெரிதும் கவர்ந்துள்ளது. இந்த ஐக்கியத்தைக் குலைக்காதபடி நீங்கள் பார்த்துக் கொள்ள வேண்டும். பொதுநலனுக்காக நீங்கள் உழைக்க வேண்டுமென நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்த நாட்டின் அழகைக் கெடுத்துவிடாதபடியும் பார்த்துக் கொள்ளுங்கள்.

45நாட்களின்பின் திறக்கப்பட்டது

சென்னை, பெப். 6

சென்னையில் இந்தி எதிர்ப்பு கிளர்ச்சிகள் காரணமாக மூடப்பட்ட கல்லூரிகள் இன்று 45 நாட்களின்பின் மீண்டும் திறக்கப்பட்டன.

ஒரு கோடி கடன் திரட்டப்படும்

சென்னை, பெப். 6

சென்னை நகரசபை ஒரு கோடி ரூபா வரையான பொதுக்கடன் ஒன்றை மக்களிடமிருந்து திரட்டவிருக்கிறது.

இதற்கான அங்கீகாரத்தை ராஜ்ய அரசாங்கம் அளித்துள்ளது. இக்கடன் நகரசபை எல்லைக்குள்ளான அபிவிருத்தித்திட்ட வேலைகளுக்கு செலவிடப்படும்.

சிங்கள தேர்ச்சி தேவையில்லையாம்

வெள்ளவத்தை, செவ்.

கொழும்பிலுள்ள அரசாங்க தமிழ் தட்டெழுத்தாளர்கள் சங்கத்தின் அயராத முயற்சியினால் தமிழ்த் தட்டெழுத்தாளர்களுக்குச் சிங்கள மொழித்தேர்ச்சி தேவையில்லை என்ற சுற்று நிருபம் திறைசேரியால் வெகு விரைவில் வெளியிடப்படவிருக்கிறது.

இதற்கு அறிகுறியாகச் சமீபத்தில் தெரிவுசெய்யப்பட்ட இரு தமிழ் தட்டெழுத்தாளர்களின் வேலை நியமனக்கடிதத்துடன் சிங்களத் தேர்வு தேவை என்[illegible]ப்பும் சேர்க்கப்படவில்லை. தற்போது அரசாங்க திணைக்களங்களில் கடமையாற்றும் [illegible] தமது ஆண்டு உயர்வுச் சம்பளப் பணத்தைத் தாமதமின்றிப் பெற்றுள்ளார்கள்.

கறுப்புப் பணம் பறிமுதல்

அகமதாபாத், பெப். 6

கறுப்புப்பணம் வைத்திருப்பவர்களிடமிருந்து அதனைப் பறிமுதல் செய்வதற்கான மசோதா விரைவில் கொண்டுவரப்பட விருப்பதாக பாரத துணைப்பிரதமர் திரு மொரார்ஜி தேசாய் தெரிவித்துள்ளார்.

கடும் பனிக்கு 20 பேர் பலி

பிகார், பெப். 6

பிகாரில் பெய்துகொண்டிருக்கும் கடும் பனிக்கு இதுவரை 20 பேர் பலியாகியுள்ளனர்.

ரயில்—பஸ் விபத்தில்

9 பேர் மாண்டனர்

லக்ஷ்மணபுரி, பெப். 6

உத்தரபிரதேசத்தில் ஓடிக்கொண்டிருந்த ரயிலுடன் பஸ் ஒன்று மோதியதால் பஸ்ஸில் சென்றுகொண்டிருந்த பிரயாணிகளில் 9 பேர் ஸ்தலத்திலேயே மாண்டனர்.

ரயில் என்ஜினும் 23 பெட்டிகளும் பாதையிலகிச் சரிந்ததால் பலத்த சேதத்துக்குள்ளாகின.

டிட்டோ—நாஸர் சந்திப்பு

கெய்ரோ, பெப். 6

யூகோஸ்லேவிய அதிபர் டிட்டோ ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி நாஸருடன் மத்திய கிழக்கு ஆசிய நிலைமை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தினர்

அஸ்வானில் நடைபெற்ற இரு தலைவர்களின் பேச்சுவார்த்தையின் போது இஸ்ரேல் புதிதாகக் கைப்பற்றிய நிலைகளிலிருந்து வாபஸாகவேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

'அஹிம்சை வாழ்விற்கு என்றும் அழிவில்லை'

வெள்ளவத்தை, செவ்.

'உலகிலுள்ள பலதரப்பட்ட போராட்ட முறைகளில் அகிம்சை வழிதான் சாலச்சிறந்தது என்பதை நடைமுறையில் காட்டி உலகிற்கு உணர்த்தியவர் காந்தி அண்ணல். அகிம்சை வழ்வுக்கு என்றும் அழிவில்லை. இந்த வழி எந்த நாட்டில் கடைப்பிடிக்கப் பட்டாலும் சரியான முறையில் கடைப்பிடிக்கபடவேண்டும். உலக மக்கள் அனைவரையும் ஒன்று சேர்க்கும் மகாத்மாவின் அன்புவழியைதான் நாமனைவரும் பின்பற்றி வாழ்க்கையின் உண்மைப் பயனை அடையவேண்டும்.'

இவ்வாறு வெள்ளவத்தை தமிழ் அரசாங்க ஊழியர் சங்கம் நடாத்திய காந்தி அண்ணலின் 20வது நினைவு தினக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த திரு. கயிலம் கதிர்காமத்தம்பி கூறினார்.

திரு.க, பேரம்பலம் பேசுகையில், 'மதுரையிலே காந்தி மியூசியம் அமைத்திருப்பது போன்று ஈழத்திலும் ஒரு நல்ல இடத்தைத் தேர்ந்து ஒரு காந்திமியூசியம் அமைப்பதற்கு எமது தலைவர்கள் முன்வரவேண்டும்' என்று கூறினர்.

திருவாளர்கள் க.சிவசுப்பிரமணியம், கே. சந்தசாமி ஆகியோரும் பேசினர்.

'வாழ்க்கை வசதிகளை நாம் பரிபூரணமாகபெற வேண்டும்'

சங்கானையில் சுதந்திரதின விழா

சங்கானை, செவ்வாய்

சுதந்திரமாக சிந்தித்து செயலாற்றி மனிதன் கவலைகளிலிருந்து விடுபட்டு சந்தோஷமாக வாழ வழிவகுத்து அதன்படி வாழ்வது தான் சுதந்திரமாகும். அந்நியர் ஆட்சியிலிருந்து விடுபட்டது மட்டும் சுதந்திரமென எண்ணுவது தவறு அப்படி எண்ணி நாம் சுதந்திர மனிதர்தானே என செயலற்று இருப்பதுவும் தவறு எமது உணவு, உடை மற்றும் வாழ்க்கை வசதிகளை நாம் பரிபூரணமாக பெறவேண்டும். எமது தேவைகளை மற்ற நாடுகளிலிருந்து பெறுமல சுயமாக உற்பத்தி செய்துசுயதேவைகளையாவது பூர்த்தி செய்தல் வேண்டும் ''உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'' என்ற பாரதியின் பாடலை நாம் இச்சந்தர்ப்பத்தில் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

வலிகாமம் மேற்குக் காரியாதிகாரி திரு. என். மாணிக்கநடராசா சங்கானையில் பொலிஸ் மைதானத்தில் கொண்டாடப்பட்ட 20-வது சுதந்திரதின விழாவில் தலைமைவகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினர்.

திரு. மாணிக்கநடராசா மேலும் பேசுகையில் படித்த வாலிபர்கள் பட்டதாரிகள் அதிகரித்துக்கொண்டு வரும் இவ்வேளையில் எமது குடும்பம், எமது சமுதாயம் எமது நாடு முன்னேறவேண்டுமென்னும் திடசங்கர்ப்பத்துடனும், உற்சாகத்துடனும் காடுகளை அழித்து பொன்கொழிக்கும் களனிகளாக்கி அதிலிருந்து பயன் பெறுவோமானால் எமக்கு பூரண பொருளாதார சுதந்திரம் கிடைக்கும். எமது விடாமுயற்சி ஒருபோதும் வீண்போக மாட்டாது.

எமது சிறிய நாடு விவசாயத்திற்கும் கைத்தொழிலுக்கும் வேண்டிய வசதிகளையுடையது. இருந்தும் ஆண்டொன்றுக்கு 36கோடி ரூபாவை அரிசிக்காகவும் உப-உணவுப் பொருட்களுக்காக 22 கோடி ரூபாவை வெளிநாட்டிற்கு அனுப்புகிறோம். அந்நிய செலவாணியை சேமித்தால் தான் நாம் பொருளாதார சுதந்திரம் பெறமுடியும்.

செயலாளரின் முன்மாதிரி

சுழிபுரம், செவ்வாய்

சுழிபுரம கிராமசபைப் பகுதி பஸ். பிரயாணிகள் சங்கச் செயலாளர் திரு. க. வாமதேவன் நேற்று இ. போ. ச பஸ்வண்டியொன்றில் பிரயாணம் செய்து கொண்டிருக்கையில் கண்டெடுத்த பணத்துடன் கொண்ட மணிப்பேசை அவ்வண்டியில் கடமையாற்றிய கண்டக்டரிடம் ஒப்படைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

இறை அருளால் கிடைத்துள்ள செல்வம், பலம், அறிவு இவற்றை மக்கள் பணிக்காக யார் பயன்படுத்துகிறார்களோ அவர்களே உண்மையில் இன்பமடைவர். ஏனெனில் இன்பமென்பது பிறருக்குக் கொடுப்பதில்தான் அடங்கியுள்ளதேயன்றி தாமே சேர்த்துவைத்துக் கொண்டிருப்பதிலல்ல. — சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 889

யாழ்ப்பாணம் பிலவங்கஹூ தை மீ 24உ. (7-2-68)

உணவு உற்பத்தி

சென்ற வருட பெரும் போகத்தில் இலங்கையின் நெல் உற்பத்தி, அரசாங்கம் எதிர்பார்த்ததைவிட அதிகரித்திருந்ததாகவும் சுமார் மூன்றரைக் கோடி புசல் நெல் உற்பத்தி செய்யப்பட்டதாகவும் விவசாய இலாகா புள்ளிவிபரம் ஒன்று கூறுகிறது. ''ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது.'' அரசாங்க இலாகாக்கள் தரும் புள்ளிவிபரங்களும் பெரும்பாலும் ஏட்டளவுடன் நின்றுவிடுவதே வழக்கம். சென்ற வருட நெல் உற்பத்திபற்றிய புள்ளிவிபரம் உண்மையானதாக இருந்தால், இதைவிட மகிழ்ச்சியும் எதிர்காலத்தைப்பற்றி அதிக நம்பிக்கையளிக்கக் கூடியதும் வேறு எதுவுமிருக்க முடியாது.

இதேசமயம் உணவு விவசாய அமைச்சு எடுத்த மற்றொரு கணக்கெடுப்பின்படி, உணவுப்பொருள் செய்கை பண்ணக்கூடிய ஆறுகோடியே ஏழு லட்சம் ஏக்கர் நிலம் இன்னும் தரிசு நிலங்களாகக் கிடக்கின்றனவாம். நிலம் இருக்கிறது; உழைப்புச் சக்தியுள்ள மக்களும் இருக்கிறார்கள். ஆனாலும் அவற்றைப் பயன்படுத்த நாம் இன்னும் தயங்குகிறோம்.

உணவு உற்பத்தியை அதிகரிப்பதற்குப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா எடுத்துவரும் முயற்சி, மழை, வெள்ளம், புயல், வரட்சி ஆகிய இயற்கைக் கோளாறுகளாலும் கட்சி அரசியல் போன்ற வேறுபாடுகளாலும் பல இடையூறுகள் ஏற்பட்டபோதிலும் ஓரளவாவது வெற்றியளித்திருப்பது நம்பிக்கையளிக்கிறது. சுதந்திர தினத்தையொட்டி பிரதமர் விடுத்த செய்தியில் உணவு உற்பத்தியை அதிகரிக்க வேண்டிய அவசியம்பற்றியும் செலவைச் சுருக்கி சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய அவசியம்பற்றியும் தெரிவித்திருந்தார். நாட்டின் இன்றைய பொருளாதார நிலை அனைவரும் அறிந்ததே. இலங்கை சுதந்திரமடைந்து இருபது ஆண்டுகளாகியும் இன்னும் பொருளாதார சுதந்திரம் அடையவில்லை. இப்பொழுதும்கூட நமது தேவைகளுக்கு வெளிநாடுகளையே எதிர்பார்த்திருக்கின்றோம். இருபதாண்டுகளுக்கு முன் நமது நாடு அரசியல் சுதந்திரம் பெற்றபோதே பொருளாதார சுதந்திரத்துக்கான பலமான அஸ்திவாரம் இடப்பட்டிருக்க வேண்டும். அன்றைய தலைவர்களும் அதன்பின் ஆட்சிபீடமேறிய நாட்டை வழி நடத்த முன்வந்தவர்களும் தீர்க்கதரிசனத்துடன் நடந்திருந்தால் இன்றைய அவல நிலை ஏற்பட்டிருக்காது.

அரிசிக்காக வெளிநாடுகளை எதிர்பார்த்து நிற்கிறோம்; பாலுக்காக அழும் குழந்தைகளுக்கும் 'கப்பல் வரட்டும்' என்று ஆறுதல் சொல்லும் நிலையிலிருக்கிறோம். எதற்கும் வெளிநாடுகளையே நம்பி வாழ்கிறோம் நமது தேவைகளை நாமே நிறைவேற்ற வேண்டிய ஆக்க ரீதியான முயற்சிகளை விடுத்து, குறுக்குவழியில் சுலபமாக அரசியல் ஆதிக்கம் பெறுவதற்காக இந்தியர் பிரச்னை, மொழிப் பிரச்னை ஆகியவைகளிலேயே நம்நாட்டுத் தலைவர்கள் கவனம் செலுத்தினார்கள். அதன் விளைவை இன்று நாம் அனுபவிக்கிறோம். என்றாலும்கூட இன்னும் தேசிய உணர்ச்சியும் தேசாபிமானமும் முற்றுமுழுதாக ஏற்பட்டுவிடவில்லை. கட்சி அரசியல் குறுக்கே நிற்கிறது. கடின உழைப்பும் சிக்கனமும் இன்று நமக்குத் தேவை என்கிறார் பிரதமர். அவர் சொல்வது உண்மை. ஆனால் இது உடனடியாகச் செயல்பட முடியுமா? தேயிலை, ரப்பர் போன்ற விளைபொருள்களிலேயே நமது நாட்டின் வருமானம் தங்கியிருந்தது; இன்றும் தங்கியிருக்கிறது. ஆனால் இப்பொருள்களின் விலை உலகச்சந்தையில் வீழ்ச்சியடைந்துள்ளது. நிரந்தரமான விலை கிடையாது. இதேசமயம் நாம் வாங்கும் அரிசி உட்பட இதர அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்திருக்கிறது. தேயிலை, ரப்பர் ஆகியவைகளின் உற்பத்திக்கும் நாட்டின் வளத்துக்கும் உழைத்தவர்களை இங்கிருந்து எப்படி அனுப்புவது என்பதில்தான் கவனம் செலுத்தி வருகிறோம். அவர்களின் உழைப்புச் சக்தியைப் பயன்படுத்தி நாட்டின் தரிசுநிலங்களை பண்படுத்தி நமக்குவேண்டிய உணவுப்பொருள்களின் உற்பத்தியை அதிகரிக்க முயற்சி செய்யவில்லை.

இப்போதும்கூடக் காலங்கடந்துவிடவில்லை. இந்த நாட்டில் வாழும் மக்களுக்கிடையில் இன, மத வேறுபாடுகளை மறந்து நாட்டின் சுபீட்சத்துக்காக திட்டமிட்ட முறையில் அனைவரையும் பயன்படுத்த முன்வரலாம். ஒரு டட்லி சேனநாயகா மட்டும் இதுபற்றி சிந்தித்து அதிக பயன் கிடைக்காது. அனைவரும் சிந்திக்க வேண்டும்; செயலாற்ற முன்வர வேண்டும். செய்வார்களா?

ஆசிரியருக்கு கடிதம்

நாவலர் சிலை

2-2-68-ல் வெளிவந்த 'ஈழநாடு' இதழில் நாவலருக்குச் சிலை எழுப்புவது பற்றி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் அளித்த பேட்டி ஒன்று காணப்படுகிறது. நான் அதை முழுவதும்படித்தேன். அப்பேட்டிக்கு கொடுக்கப்பட்ட தலையங்கத்துக்கும் பண்டிதமணி கூறியதற்கும் வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தெரிகிறது.

உங்கள் தலையங்கம 'நாவலரே தமக்குச் சிலை அமைப்பதை விரும்பியிருக்கமாட்டார். பண்டிதமணி கூறுகிறார்' என்று தெரிவிக்கிறது. நாவலருக்கு சிலைஎழுப்பும் இடத்தையே பண்டிதமணி ஆட்சேபிக்கிறார் என்று எனக்குத் தோன்றுகிறது. ஒரு இந்து சூழ்நிலையில் அச்சிலை எழுப்பப்படுவதை அவர் விரும்புகிறாரேயன்றி, யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையம் போன்றதோர் இடத்திலல்ல.

பேட்டியில் அவர் கூறியதற்கும் தலையங்கத்துக்கும் முரண்பாடுள்ளது.

எஸ் சிவசுப்பிரமணியம்
கொழும்பு.
3-2-68

புதிய முகப்பு நிறுவப்படும்

குரும்பசிட்டி, செவ்.

பலாலி விமான நிலையத்தில் தற்போது பிரயாணிகள் தங்குவதற்கு வழங்கப்பட்டுள்ள வசதிகளை மேலும் நவீன முறையில் அமைத்துக் கொடுக்க இலங்கை விமானப்போக்கு வரத்துச் சபையினர் முன்வந்துள்ளனர். இதற்கென வெகு விரைவில விமான நிலைய இறங்கு துறை முன்முகப்பில் புதிய கட்டிடம் நிறுவப்படவிருக்கின்றது. இதனுடன் விமானம் இறங்கும் பாதைகளும் விஸ்தரிக்கப்பட விருக்கின்றது.

இவ்வாரம் யாழ்ப்பாணம் விஜயம் செய்திருந்த இலங்கை விமானப் போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. வீ. ரி. டி. சொய்ஸா பலாலி விமான நிலைய விஸ்தரிப்பு அபிவிருத்தி வேலைகளை நேரில் கவனித்தார். இவருடன் வந்திருந்த மற்றும் சில உயர்தர அதிகாரிகளும் விமான நிலையத்தையும், யாழ் நகரிலுள்ள விமானச் சேவைக் காரியாலயத்தையும் சென்று பார்வையிட்டனர்.

நூல்நிலைய அங்கத்தவருக்கு ஒரு வாய்ப்பு

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பொதுஜன நூல்நிலைய மேல்மாடியில் அமைக்கப்பட்டிருக்கும் அமெரிக்க நூல்நிலையப்பகுதியிலுள்ள நூல்களை, பொதுஜன நூல்நிலையத்தில் அங்கத்தவர்களாக இருப்பவர்கள் அதே அடையாள அட்டையுடன் இரு வாரங்களுக்கு வீட்டுக்கு எடுத்துச் செல்லலாம் என பொதுஜன நூலகப் பொறுப்பாளர் திரு. இ. பாக்கியநாதன் அறிவித்துள்ளார்.

ஏற்கனவே இங்கு புத்தகங்களை எடுத்துச் சென்றவர்கள் அவைகளை இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் திருப்பிக் கொடுத்துவிடல் வேண்டுமென்றும் இத்தவணைக்குப் பிந்தினால் அவர்களிடமிருந்து தாமதக் கட்டணம் அறவிடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ஈ. நி.)

உள்ளூர் இடமாற்றம்

புன்னாலைக்கட்டுவன், செவ்.

அண்மையில் நடைபெற்ற அகில இலங்கை ரீதியான ஆசிரியர் இடமாற்றங்களால் ஏற்பட்ட சீர் குலைவுகளை ஓரளவு சரிப்படுத்தும் நோக்கத்துடனும், 6-ம், 7ம் வகுப்புகளிற் பட்டதாரிகள் கற்பிக்கக் கூடாதென்ற கல்வித் திணைக்களக் கட்டளைப்படியும், ஆசிரியருக்கான உள்ளூர் இடமாற்றங்கள் இம்மாதம் நடைபெறவிருக்கின்றன. வட பகுதியில் பல பாடசாலைகளில் இன்னும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவது நிர்வாகத்தின் கவனத்தை ஈர்த்துள்ளதாகத் தெரிகிறது.

சீசன் டிக்கற் இல்லை

புன்னாலைக்கட்டுவன், செவ்வாய்

பாடசாலைகளுக்கு பஸ் வண்டிகளிற் செல்லும் நூற்றுக்கணக்கான குழந்தைகளின் பெற்றோர் இம்மாதச் சீசன் ரிக்கற்றுக்கள் பெறுவதற்கு 1-ம் திகதி இ. போ. ச. அலுவலகத்துக்குச் சென்று ஏமாற்றத்துடன் திரும்ப வேண்டிய நிலை ஏற்பட்டது. குறைந்த கட்டணச் சீசன் ரிக்கற்றுக்கள் கைவசமில்லை என இ. போ. ச. அதிகாரி கையை விரித்தாராம். பல பெற்றோர்கள் இச்சீர்கேடுபற்றி மேலிடத்துக்கு முறையிட்டுள்ளதாகத் தெரிகிறமி.

சங்கங்களை இணைக்க முயற்சி

சுழிபுரம், செவ்வாய்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் ஆங்காங்கே இயங்கும் அந்நிய காலச் சங்கங்களை ஒன்றுபடுத்தி ஓர் சமாசமாக இயங்க யாழ். விவாக அந்தியகால சேமலாபநிதிச் சங்கத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர் இதுசம்பந்தமாக சங்கச் செயலாளர் திரு. அ. கார்த்திகேசு ஒரு சுற்றுநிருபத்தை சகல சங்க செயலாளருக்கும் அனுப்பியுள்ளார்.

இருவருக்கு பதில் ஒருவர்

காங்கேசன்துறை, செவ்

தையிட்டி கணேச வித்தியாசாலைக்கு ஒருவருடத்தின் பின் ஒரு ஆசிரியர் கல்வி இலகாவினால் அனுப்பப்பட்டுள்ளார்.

ஒருவருடகாலமாக ஆங்கிலம், தையற்கலை, விஞ்ஞானம் ஆகிய பாடங்கள் படிப்பிப்பதற்கு ஆசிரியர்கள் இல்லாமல் மாணவர்கள் பாதிக்கப்பட்டுவந்தனர் இரண்டு ஆசிரியர்கள் இங்கிருந்துஇடமாற்றலாகிச் சென்றதற்குப் பதிலாக ஒரு ஆசிரியர் இப்போது அனுப்பப்பட்டுள்ளார்.

ஆசிரியருக்கு பொற்கிழி

புன்னாலைக்கட்டுவன், செவ்.

சேவையிலிருந்து இளைப்பாறவிருக்கும் உரும்பராய் இந்துக் கல்லூரி ஆசிரியர் திரு. சி. ரி. நவரத்தினத்துக்கு கல்லூரி ஆசிரியரும் மாணவரும் தனித்தனி விழாவெடுத்துப் பொற்கிழி வழங்க விருக்கிறார்கள். நாற்பது ஆண்டு சேவை செய்த திரு. நவரத்தினம், கிராமத்திலுள்ள சமயப் பணிகளில் [illegible] ஈடுபட்டு [illegible] குறிப்பிடத்தக்கது.

'பாடசாலை பஸ்சேவையை திருத்தி அமைக்குக' கரவெட்டி மாணவர் கோரிக்கை

உடுப்பிட்டி, செவ்.

வடமராட்சியில் பாடசாலைசேவை பஸ் வண்டியொன்று தினமும் மாணவர்களுக்குச் ''சுற்றுலா'' அளித்துவருவதாக அறியப்படுகிறது.

பலகாலமாக பஸ் சேவையின்றி இருந்து வந்த கரவெட்டிப் பகுதிக்கு உடுப்பிட்டி எம்.பி. திரு. மு. சிவசிதம்பரத்தின் முயற்சியின் பயனாகப் பாடசாலை மாணவர்களுக்கென பஸ்சேவையொன்று நடாத்தப்பட்டுவருகிறது. இச்சேவையினால் பாடசாலை மாணவர்கள் பெரிதும் கஷ்டமடைந்து வருகின்றனராம். இப்பாடசாலை பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டபொழுது வயிரவெல்லனியிலிருந்து ஆரம்பித்துக் கரவெட்டி, நெலலியடிமத்திய மகாவித்தியாலயம் ஊடாக குறிப்பிட்ட இடத்தைச் சென்றடைவது வழக்கமாம். ஆனால் தற்பொழுது இச்சேவையில் மாற்றம்செய்யப்பட்டுள்ளதால் அந்தணத்திடலில் ஆரம்பித்துக் கரவெட்டி, அரசடி, நெல்லியடி மந்திகை, வல்லிபுரக் கோயில்சந்தி, தும்பளை ஆகியஇடங்களைச் சுற்றியே பிரஸ்தாபபாடசாலைசேவை பஸ்வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியை அடைகின்றதாம். இ... மாணவர்கள் இட... டியினால் 'பெருமகஷ்ட... அனுபவித்து வருகி... றனராம்.

இதுமட்டுமின்றி பஸ் குறிப்பிட்ட பா... லையை வந்தடைய ஒ... த்தியாலயம் பிடிக்கிற... இதனால் கரவெட்டிப் ... ஊடாகச் செல்லும் பஸ் வண்டியை நெல்... மத்திய கல்லூரி வீ... யாக வதிரியைச் ... டைய ஒழுங்குசெய்ய... டுமென்றும், மந்திகை... பளைக்கு வேறுபாட... பஸ் சேவையை ஆரம்... வேண்டுமென்றும், மா... ர்களின் கஷ்ட நி... போக்க இதுவே சிறந்... யென்றும் தற்போது... முறையிலிருக்கும்பாட... பஸ்சேவை மாணவர்... அதிகநேரம் சிரமப்படுத்... தோடு ஓர் உள்ளூர் ...றுலாபோன்று கொ... செல்வதாகவும் இவ்விட... தில் இ.போ.ச. அதிகாரி... தக்க நடவடிக்கையெடு... சேவையைச் சீர்திரு... அமைக்க வேண்டுமென் மாணவர்கள் முறையி...ள்ளனர்.

'தொழிற்பயிற்சி பெற்றவர்கள் பிரயோசனப்படுத்தப்படவில்லை'

யாழ்ப்பாணம், புதன்

''ஒவ்வொருதொழில்துறையிலும் பயிற்சியும் அனுபவமும் இருந்தால்தான் அந்தத் தொழில்களை சிறந்த முறையில் அபிவிருத்திசெய்வது மட்டுமல்ல வேலையில்லாப் பிரச்னையையும் ஓரளவு கட்டுப்படுத்த முடியும் என்ற காரணத்தினாலேயே அரசாங்கம் முக்கியமான நகரங்களில் தொழிற் பயிற்சி நிலையங்களை நிறுவி வாலிபர்களுக்கு தொழிற் பயிற்சிகளை அளித்துவருகிறது.

பரந்தன், சுண்டிக்குழி, கொழும்புத்துறை ஆகிய பகுதிகளில் ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களிலிருந்து நூற்றுக்கணக்கான தொழில் நுட்ப வல்லுனர்கள் வெளியேறியுள்ளார்கள். ஆனால் அவர்கள் அனைவர்களுக்கும் அரசாங்கம் இன்னும் வேலை வாய்ப்பு அளிக்கவில்லை. தொழிற் பயிற்சிபெற்ற வாலிபர்களை அரசாங்கம் பிரயோசனப்படுத்தாமலிருப்பது தற்போதைய அரசாங்கத்திற்கும், நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்கும் உகந்ததல்ல''

யாழ்ப்பாண கட்டிடப் பயிற்சிக் கல்லூரியில் உதவித்தொழில் அதிபர் திரு. ஜி. டி. ராஜா தலைமையில் நடைபெற்ற கட்டிட, தச்சுதொழில் நுட்ப வல்லுனர்களின் முதலாவது பரிசளிப்பு விழாவில் தொழில் நுட்ப மாணவர் காரியதரிசி திரு. கா. இரகுநாதன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்விழாவுக்கு திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டார்.

திரு கா. இரகுநாதன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

நாட்டின் வளத்தை மேம்படுத்த அதி அக்கறையுடன் தொழிற்பயிற்சிகளை எவ்வளவோ பணம் செலவளித்து அளிக்கும் அரசாங்கம் பயிற்றப்பட்ட பயிற்சியாளர்களின் சேவையைப் பெறுவதனாலேயே தனது நோக்கத்தை நிறைவேற்ற முடியும். எனவே பயிற்றப்பட்ட கட்டிடக் கலைஞர்களை ஒன்று திரட்டி ஒரு கூட்டுச் சங்கம் அமைத்து சங்கத்திடமே அரசாங்கத்தின் புதிய கட்டிடம் கட்டும் பொறுப்பை படைக்கவேண்டும்'

இதுவிஷயத்தில் யா...பாண எம். பி. தீவிரகவ... செலுத்தவேண்டும் என... அவர் கேட்டுக்கொண்டா... திரு. ஜி. ஜி. பொன்...பலம், திரு. ஜி. டி. ரா... திரு. எம். பற்குணம், தி... வி. கோணேஸ்வரன் ஆ...யோரும் பேசினர். [வி. ...

புதிய வழக்கறிஞர்கள்

உடுப்பிட்டி, செ...

கரவெட்டியைச் சேர்... திரு. எம். சிற்றம்பல... சென்றமாதம் 27-ம் தி... வழக்கறிஞராகச் சத்திய பிரமாணம் செய்து கொ...டார். இவர் நெல்லிய... மத்திய மகா வித்தியால...தின்பழையமாணவராவா... புலோலியைச் சேர்ந்... திரு. கே. கிருஷ்ணபிள்... வழக்கறிஞராகச் சத்திய பிரமாணம் செய்துள்ளா... இவர் பருத்தித்துறை ஹா...லிக் கல்லூரியின் பழை... மாணவராவார். இவர்க... இருவரும் தமது தொழிலை கொழும்பில் நடத்துவா...கள்.

மட்டு நகரில் கிளை

மட்டக்களப்பு, செ...

மட்டுநகர் பகுதியில் தமி... பேசும் அரசாங்க பொது ஊழியர் சங்கத்தின் கிளை ஒன்று திறக்கப்பட வேண்டும் என மட்டுநகர் அங்க...தவர்கள் கேட்டுக்கொண்...தற் கிணங்க அவர்களின் விருப்பத்தை ஏற்று இ... மாதம் 20-ம் திகதி மட்டு நகர் செண். மேரீஸ் பாடசாலையில் மேற்படி சங்க...தின் கிளை ஒன்றைத்திறப்பத...கான சகல ஏற்பாடுகளு... கிளை அமைப்பாளர் திரு... த. சந்திரராசாவினால் மே... கொள்ளப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...சவையை ...க்குக' ...கோரிக்கை

...கல்லூரியை வந்த ...றதாம். இதனுல் ...ர்கள் இடநெருக்க ...பெருமகஷ்டத்தை ...த்து வருகின்ற...

...ட்டுமின்றி இந்த ...ிப்பிட்ட பாடசா ...வந்தடைய ஒருமணி ...யம் பிடிக்கிறதாம். ...கரவெட்டிப் பகுதி ...் செல்லும் இந்த ...டியை நெல்லியடி ...கல்லூரி வீதிவழி ...ிரியைச் சென்ற ...ழுங்குசெய்யவேண் ...றும், மந்திகை, தும் ... வேறுபாடசாலை ...வையை ஆரம்பிக்க ...மென்றும், மாணவ ...கஷ்டத்தைப் ...இதுவே சிறந்தவழி ...ம் தற்போதுநடை ...லிருக்கும்பாடசாலை ...வ மாணவர்களை ...ரம் சிரமப்படுத்துவ ...ஓர் உள்ளூர் சுற் ...ான்று கொண்டு ...ாகவும் இவ்விடயத் ...பா.ச. அதிகாரிகள் ...டவடிக்கையெடுத்து ...யைச் சீர்திருத்தி ...வேண்டுமென்றும் ...ர்கள் முறையிட்டு...

...ற்றவர்கள் ...படவில்லை'

...ிரட்டி ஒரு கூட்டுற ...கம் அமைத்து அச் ...ிற்கே அரசாங்கத் ...புதிய கட்டிடங்களை ...பொறுப்பை ஒப் ...வேண்டும்' ...ிஷயத்தில் யாழ்ப் ...ம். பி. தீவிரகவனம் ...வேண்டும் என்று ...ட்டுக்கொண்டார். ...ி. ஜி. பொன்னம் ...திரு. ஜி. டி. ராஜா, ...ம். பற்குணம், திரு. ...ானேஸ்வரன் ஆகி ...பேசினர். [வி. நி.]

புதிய ...க்கறிஞர்கள்

...உடுப்பிட்டி, செவ் ...வட்டியைச் சேர்ந்த ...ம். சிற்றம்பலம் ...மாதம் 27-ம் திகதி ...றிஞராகச் சத்தியப் ...ணம் செய்து கொண் ...இவர் நெல்லியடி ...மகா வித்தியாலயத் ...ழயமாணவராவார். ...ாலியைச் சேர்ந்த ...கே. கிருஷ்ணபிள்ளை ...றிஞராகச் சத்தியப் ...ணம் செய்துள்ளார். ...ருத்தித்துறை ஹாட் ...ல்லூரியின் பழைய ...ராவார். இவர்களி ...தமது தொழிலைச் ...ம்பில் நடத்துவார்

...நகரில் கிளை

...மட்டக்களப்பு, செவ் ...நகர் பகுதியில் தமிழ் ...அரசாங்க பொது ...ர் சங்கத்தின் கிளை ...திறக்கப்பட வேண் ...ன மட்டுநகர் அங்கத் ...ள் கேட்டுக்கொண்ட ...ணங்க அவர்களின் ...த்தை ஏற்று இம் ...20-ம் திகதி மட்டு ...சென். மேரிஸ் பாட ...ில் மேற்படி சங்கத் ...ளை ஒன்றைத்திப்பதற் ...சகல ஏற்பாடுகளும் ...அமைப்பாளர் திரு. ...திரராசாவினுல் மேற் ...ளப்பட்டுள்ளன.

பிற நாடுகளுக்கும் உணவு அனுப்பலாம்

வவனியா, செவ்வாய் இலங்கையிலுள்ள சகல பயிர்செய்கைக் குழுவும் தனது கடமையை உலகின் உயிர்நாடியென உணர்ந்து கண்ணியமாக செயற்பட்டால் நம் நாடாகிய இலங்கையின் உணவுத் தேவையைப் பூர்த்திசெய்வதுடன் பிற நாடுகளுக்கும் ஈழத்து உணவை அனுப்பி வாழ வைக்கமுடியும.

வவனியாநகர பயிர்செய்கைக்குழுவின் தலைவர் திரு. இ. வல்லவராசா வவனியா அமெரிக்கன் மிஷன் பாடசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினர்.

அவர் தொடர்ந்து கூறியதாவது:-

வவனியா நகரபயிர்செய்கைக்குழு உணவு உற்பத்தியில் முன்னேடியாக நின்று உற்சாகப்படுத்துகிறது எனின் மிகையாகாது. வவனியா பூந்தோட்டப் பகுதியில் ஏக்கருக்கு 100க்கு அதிகமாக புசல் நெல்லை ஓர் விவசாயி விளைவித்தது யாவரும் அறிந்ததே.

மேலும் பயிர்ச்செய்கைக்குரிய உபகரணம், நோய் தடுப்பு, பாதுகாப்பு போன்ற அத்தியாவசிய வேலைகளிலும் இக்குழு ஈடுபட்டதென்பது குறிப்பிடத்தக்கது. வவனியா எஸ். பி. திரு. எஸ். சுப்பிரமணியம் உட்பட பலர் சொற்பொழிவாற்றினர்.

யாழ்ப்பாணத்தில் மலேரியா

மூளாய் ஆஸ்பத்திரியில் நால்வர் அநுமதி

சுழிபுரம், செவ்வாய் மூளாய் கூட்டுறவு வைத்தியசாலையில் நான்குநோயாளிகள் மலேரியா நோயினுல் பீடிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்கள் நோய்க்கு மருந்துபெறச் சென்றபோதே மலேரியா நோயினுல் பீடிக்கப்பட்டுள்ளனர் என கண்டுபிடிக்கப் பட்டனர்.

யாழ்ப்பாணக்குடா நாட்டுக்கு வெளியே கடமையாற்றும் குறிப்பாக அனுராதபுரப்பகுதியில் வேலைசெய்பவர்கள் நோயினுல் பாதிக்கப்பட்ட நால்வரில் இருவராவர்.

இருவரும் தொல்புரம் கிராமத்தைச் சேர்ந்தவராவர். இந்நால்வரின் நோய் சம்பந்தமாக மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை வைத்திய அதிகாரி மானிப்பாய் சுகாதார அதிபருக்குமுறைப்பாடு செய்துள்ளார்.

இலங்கையின் பல பாகங்களில் இந்நோய் பரவும் அறிகுறிகள் காணப்படுவதால் பொதுமக்களை மிகவும் கவனமாக இருக்கும்படி வைத்திய அதிகாரிகள் வேண்டியுள்ளனர்.

இன்றைய பலன்

[7-2-68]

புதன்கிழமை

[தை மீ 24 வ.]

திதி- அட்டமி காலை 6-59 மேல் நவமி
நட்சத்திரம்- கார்த்திகை இரவு 2-53 மேல் ரோகணி
ராகுகாலம்- 12-36-2-06
சுபநேரம்- 5-06-6 36

இன்று பிறந்தவர்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் உங்கள் லக்கயிலே இருக்கின்றது. விடாமுயற்சி இருப்பின் துரித முன்னேற்றம் உண்டு. பெரியோர் ஆசியும், நண்பர்கள் உறவும் தாராளமாகக் கிடைக்கும். குழந்தைகளால் குடும்பத்தில் கொண்டாட்டமுண்டு. திருமணமாகாதவர்களுக்குத் திடீர் விவாகப் பேச்சுக்கள் இடம்பெறும். இலட்சிய வாழ்வு நிச்சயமுண்டு.

மேஷம்- கவலைக்கு இடமுண்டு, கடமையில் கவனம் வேண்டும்
ரிஷபம்- துன்பத்தின் நிழலாட்டம் தொடர்ந்து வரும் பகை.
மிதுனம்- மனைவாழ்வில் மலர்ச்சி, மனதில் மகிழ்ச்சி.
கடகம்- இருண்டமனம். ஆத்திர மிகுதி.
சிம்மம்- தாய்வழிசுகம், தனத்துடன் வாழ்தல்.
கன்னி- இன்பத்தின் அழைப்பு இனறு பொன்னுள்.
துலாம்- வேவுக்கண்ணை தொடுப்பர் விழிப்புடன் இரு.
விருச்சிகம்- குடும்ப வாழ்வு கட்டி வெல்லம், குழந்தைகளின் கொண்டாட்டம்.
தனுசு- சிநேகிதர் பகை, சிந்தையில் குழப்பம்.
மகரம்- கைகொடுப்பார் தந்தை, காத்திருக்கும் உறவு.
கும்பம்- இடமாற்றம் நன்று, ஏற்றமுமுண்டு.
மீனம்- மைந்தரால் புகழ், மகிழ்ச்சித்தாண்டவம்.

— சோதிடக்கலாநிதி —
திருமலை வேலுப்பிள்ளை

கட்டட பயிற்சியில் சித்திபெற்றோர்

யாழ்ப்பாணம், புதன் அரசாங்கத்தினுல் யாழ்ப்பாணத்தில் புதிதாக சுண்டிக்குளியில் ஆரம்பித்த கட்டிடப் பயிற்சிக் கல்லூரியின் இறுதிப் பரீட்சையில் சித்திபெய்தி பின்வரும் 13பேர் கட்டிடக் கலைஞர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த வருடம் கட்டிடக் கலைஞர்களாகத் தெரிவு செய்யப் பட்டவர்களின் விபரம்பின் வருமாறு:-

கே. நவரெட்டினம், என். சிவராசா, எஸ். ஜெயராசா கே. ரகுநாதன், கே. துரைராசா, எம். தியாகராசா. எஸ். வல்லிபுரநாதன், டி. ஜே. ஜேசுதாசன், ஜே. ஏ எல். சின்னையா, நேயர்தொமஸ், எஸ். செல்வராசா, ரி ஏ. பி. இராசசூரியர். எஸ். சிவராசா, ஆர். கருணைநீதராசா, (வி. நி.)

வரகுச் சூடுகள் தீக்கிரை

பண்டத்தரிப்பு, செவ். பெரிய விளானை அடுத்துள்ள விளாவெளி வயல்களில் அறுவடை செய்து குவித்து வைக்கப்பட்டிருந்த வரகுச் சூடுகள் தீக்கிரையாக்கப்பட்டிருக்கின்றன.

"நாவலர் பாதையில் நாம் செல்வோம்"

பாராட்டு விழாவில் கோப்பாய் எம்.பி.

கோப்பாய், திங்கள் 'எந்தவொரு காலத்திலும் பெரும் பான்மைச் சமூகத்தவர்கள் சிறுபான்மைச் சமூகத்தவர்களை அடக்கி, ஒடுக்கிவாழமுடியாது. அத்தகைய ஒரு நிலை ஏற்படினும் கூட நீண்டநாள் நிலைத்திருக்கமுடியாது. அந்நியர் ஆட்சிக்காலத்திலே சைவமக்களின் மதசுதந்திரத்தைப் பாதுகாப்பதற்காக நாவலர்பெருமான் தோன்றினுர். அவரது பணியினுலேயே நமது மதம், பண்பாடு, கலை, கலாச்சாரம் முதலியன இன்று சிறப்புற்று விளங்குகின்றன. நாம் அவருக்குச் செய்யும் நன்றிக்கடன் அவர் காட்டியபாதையிலே, சைவத்தின் இலட்சியங்களை உணர்ந்து, அவற்றை நிறைவேற்றி உண்மையான சைவர்களாக வாழ முற்படுவதேயாகும்'.

இவ்வாறுகோப்பாய் நாவலர் பாடசாலை முன்னுள் தலைமை ஆசிரியர்களான திருவாளர்கள் சு. கார்த்திகேசஐயர், மு. வேலாயுதபிள்ளை ஆகியோரின் சேவை நலன் பாராட்டுவிழாவில் உரையாற்றுகையில் கோப்பாய் எம்.பி. திரு. சி. கதிரவேற்பிள்ளை கூறினுர்.

இவ்விழா ஆசிரியர் திரு. சே. சோமசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. இ. முருகேசம்பிள்ளை. பண்டிதர் திரு. சி. கந்தையா, திரு. ஆர். பி. ஹரன் ஆகியோருட்பட மற்றும் பலர் பாராட்டுரை வழங்கினர். பாராட்டுப்பத்திரங்களும் வாசித்தளிக்கப் பட்டன.

இளவாலை கொலை வழக்கு; இம்மாதம் 14-ம் தேதிவிசாரணை

குரும்பசிட்டி, செவ். எதிரிகளை தொடர்ந்து விளக்கமறியலில் இருக்க உத்தரவிட்ட மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் இளவாலை மாஜி பொலிஸ்கான்ஸ்டபிள் கொலைவழக்கு விசாரணையை இம்மாதம் 14-ம் திகதிக்குஒத்திவைத்துள்ளார். விசாரணையின்போது சாட்சிகள் சமூகமளித்திருந்தபோதிலும் வைத்திய அதிகாரியின்சாட்சியத்தை பதிவுசெய்ததன் பின்னர் மற்றைய சாட்சிகளை அழைக்கப்போவதாக பொலிஸ் தரப்பில் எடுத்துக் கூறப்பட்டது.

இவ்வழக்கில் இளவாலையைச் சேர்ந்த சூசைப்பிள்ளை ஞானப்பிரகாசம் என்பவரை இவ்வருடம் தை மாதம் முதலாம் திகதி கொலை செய்ததாக எஸ். அந்தோனிப்பிள்ளை. ஏ.ஜேசுதாசன், ஏ. ஜெயரத்தினம் ஆகிய மூவர்மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

தம்பியை கொலை செய்ததாக அண்ணன்மீதும் அண்ணனின் இரு புதல்வர்கள் மீதும் குற்றம் சாட்டப்பட்டுள்ள இவ்வழக்கை காங்கேசன்துறைப் பொலிசார் தொடர்ந்துள்ளனர்.

எதிரிகள் சார்பில் வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜிராகியுள்ளார்.

விவசாயிகள் பயனடைய

கொழும்பு, செவ். விவசாயிகள் மேலும் பயனடையும் வகையில் மக்கள் வங்கியால் வழங்கப்படும் கடன் திட்டம் திருத்தியமைக்கப்பட விருக்கிறது. இதன் படி/முன்னரிலும் பார்க்க இலகுவில் விவசாயிகள் கடன்களைப் பெறக் கூடியதாகவிருக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது. இப்புதிய திட்டம் மார்ச்மாதத்திலிருந்து செயலாகவிருக்கிறது.

நிவாரணம் வழங்கவில்லை

அனலைதீவு, செவ். அனலைதீவில் வெள்ளத்தால் பாதிக்கப் பட்டவர்களுக்கு வெள்ள நிவாரணம் இது வரை வழங்கப் படவில்லை எனத் தெரிகிறது. அனலைதீவு கிராமசேவையாளரின் நிவாரண மதிப்பீட்டின்பின், சமூக சேவைப்பகுதியைச் சேர்ந்த உத்தியோகத்தர்களும் வெள்ளத்தால் [illegible] வீடுகளைப் பார்வையிட்டுச் சென்றும் இரு மாதங்களுக்கும் மேலாகிவிட்டனவாம்.

பஸ்கள் பயங்கர மோதல்

கொழும்பு, செவ்வாய் வெல்லம்பிட்டிய பிரதான வீதியில் நேற்று இரட்டைத்தட்டு பஸ் ஒன்றும் சாதாரணகடுகதி பஸ்வண்டி யொன்றும் பயங்கரமாக மோதிக்கொண்டதில் இருபஸ்ஸிலிருந்த பிரயாணிகளில் நால்வர் மாண்டனர் ஒருவர் கடுகதி பஸ்ஸின் சாரதியாவர். 20பேர் அபாயகரமான நிலையில்சிகிச்சை பெறுகின்றனர்.

இடமாற்றம்

சங்கானை' செவ். வலிகாமம் மேற்கு காரியாதிகாரி கந்தோரில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. கே. இராமச்சந்திரன், திரு. ஆர். கனகரத்தினம் ஆகியோர் முறையே அனுராதபுரம் தேசிய வீடமைப்பு கந்தோருக்கும், அனுராதபுரம் கச்சேரிக்கும் இம்மாதம் 1ம்திகதி தொடக்கம் மாற்றலகியுள்ளனர்.

○ ○

சங்கானை, செவ்' வலிகாமம் மேற்கு காரியாதி கந்தோரில் லிகிதராகக் கடமையாற்றிய திரு. சொக்கலிங்கம் நவரத்தினம் இம்மாதம் 1ம் திகதி தொடக்கம் வலிகாமம் வடக்கு காரியாதிகந்தோருக்கும்அன்னுரின் இடத்திற்கு திரு. என் சச்சிதானந்தம் வலி-வடக்கு காரியாதி கந்தோரிலிருந்தும் மாற்றலாகியுள்ளனர்.

(11-ம் கலத்தொடர்ச்சி)

[சிவந்த கண்களையுடைய வெள்ளிய விடையை ஏறுகின்றவரும், யாவராலும் அடையப்படும் பெருமானுமாயுள்ள இறைவருடைய இடையாற்றையும், இடைமருதையும, வன்றொண்டனுகிய நம்பியாரூரன் சுவை ஊறும் வாயினையுடையவனுய், தெளியத்தகுவாரது உள்ளங்கள் தெளிவதற்கு வாயிலாய் உள்ள தவங்களோடு நினைந்து பாடிய பாடல்களை சொல்லுகின்றவர்கள் வினைத்துன்பம்நீங்க உள்ளம் குளிர்வார்கள்]

ஐயாறன் எழுதுகிறேன்

சென்னை தி.மு.க. அமைச்சர் நெடுஞ்செழியன், 'சைவ சித்தாந்தம்' என்னும் ஒரு நூலுக்கு முன்னுரைஎழுதியிருப்பதைப் பார்த்தேன். வியப்பும் மகிழ்ச்சியுமாக இருந்தது.

சென்னையிலே நடந்த இரண்டாவது உலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டை முன்னிட்டு தருமபுரம் ஆதீனத்தார் 'சைவசித்தாந்தம்' எனும் நூலை ஆங்கிலத்தில் அழகாக வெளியிட்டு, அம்மகாநாட்டுக்கு அர்ப்பணித்துள்ளனர்.

சித்தாந்த கலைச்செல்வர் வஜ்ரவேலுமுதலியார்அவர்கள இதன் பதிப்பாசிரியர். ஆதீனத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகளும், முதலியார் அவர்களும் கடைசி நாளன்று 'எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு வந்த. இந் நூலையும், மகாவித்வான் அருணை வடிவேலு முதலியார் எழுதிய சித்தாந்தத்தெளிவியல் என்ற தமிழ் நூலையும் எங்களுக்கெல்லாம் அன்பளிப்பாக வழங்கினர்.

இதில் என்மனதை முதலில் கவர்ந்தது இந்து அறநிலைய அமைச்சர் நெடுஞ்செழியன் எழுதியுள்ள ஆங்கில முன்னுரைதான். சமய நம்பிக்கையில்லாதவரென்று கருதப்படும் ஓர் அமைச்சரிடம் இந்நூலுக்கு நல்ல முன்னுரை பெறமுடிந்ததற்காக தருமபுரம் ஆதீனத்தைப் பாராட்டவேண்டும்.

அந்த முன்னுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறேன்.

ஃ ஃ ஃ

முன்னுரை

'ஒருநாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாற்கு ஆயிரம், திருநாமம்பாடி நாம் தெள்ளேணங் கொட்டாமோ!'

மணிவாசகப் பெருந்தகை அறிவுறுத்தியுள்ள உண்மை இது.

இப்பேருண்மையை, நாமனைவரும் உணர்ந்துவிட்டால், சமயப்பூசல்களும் சச்சரவுகளும் இரவேசெய்யா, பல்வேறு சமய தத்துவங்களும், மனிதனின் மனச்சார்புகளுக்கேற்பவே வளர்ந்துள்ளன. மணிவாசகர் கூறியுள்ள மேற்குறித்த பேருண்மையை நாமெல்லாம் அறிந்து உணர்ந்தோமாயின், நமது சமூக வாழ்வு சிரசகவும், திருக்குறள் நெறிக்கு உகந்துமிருக்கும்.

இந்த 'சைவ சித்தாந்தம்' போன்ற வெளியீடுகள், அன்வகையில் மக்களுக்குப்பயனளிக்குமென்பதே என் அவா. [ஒப்பம்]

வி. ஆர். நெடுஞ்செழியன்,
கல்வி, கைத்தொழில் அறநிலைய அமைச்சர்.
சென்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை 9.
ஜனவரி 1968.

ஃ ஃ ஃ

இந்நூலை அறிவாளியான அவர் படித்துத்தான் இப்படி எழுதியிருக்கவேண்டும். அறிவுக்கு விருந்தும், வாழ்க்கைக்குமேலானவழியும்காட்டும்அவ்வரியதமிழ்ச் செல்வம், அவரைநல்ல ஆஸ்திகராகவும் ஒரு சித்தாந்தச் செல்வராகவும் ஆக்கிவிடுமாயின் அதில்வியப்பென்ன? எல்லாம் திருவருள்!

ஃ ஃ

ஊறுவாயினன் நாடியவன்
றொண்டனூரன்,
தேறுவார் சிந்தை தேறு
மிடஞ்செங்கண்
வெள்ளேறு,
ஏறுவாரெய்த மாணிடை
யாறிடை மருதைக்,
கூறுவார் வினை எவ்விட
மெய் குளிர்வாரே.

— ஸ்ரீ சுந்தரமூர்த்தி
சுவாமிகள்

(10-ம்கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டாக்டர்கள் தொகை குறைக்கப்படமாட்டாது?

கொழும்பு, செவ்வாய்

டாக்டர்கள் தொகையைக் குறைக்க வேண்டுமென அரசாங்கம் முன்னர் செய்திருந்த முடிவை மாற்றிக்கொள்ளுமெனத் தெரிகிறது.

டாக்டர்களின் தொகையை 130 ஸ்ரீ 100 என்ற விகிதத்துக்குக் குறைப்பதென அரசாங்கம் முன்னர் தீர்மானித்திருந்தது.

தேசிய உயர் கல்விச்சபை இப்போது டாக்டர்களின் தொகை போதாது இருப்பதால், டாக்டர்கள் தொகையைக் குறைக்கக் கூடாதென அரசாங்கத்துக்கு சிபார்சு செய்தது. இதனைத் தொடர்ந்து அரசாங்கம் டாக்டர்கள் தொகையைக் குறைப்பதில்லையென மாற்றிக்கொள்ளும் என தெரிய வந்துள்ளது.

சிலாபத்தில் சைவ மகாசபை அங்குரார்ப்பணம்

யாழ்ப்பாணம், செவ்

'புத்தளத்தில் வாழும் 5 வீதமான இந்துக்கள் தமக்கென ஒரு சைவமகாசபையை நிறுவினர், இன்று அச்சபை பெரிய ஸ்தானமாக வளர்ச்சியடைந்து பல நல்லகாரியங்களைச் செய்து வருகிறது. சிலாபத்தில் முன்னேஸ்வரம், மருதங் குளம், சூசலை, உடப்பு இவையெல்லாம் நூறுவீதம் இந்துக்களைக்கொண்ட கிராமங்கள் சிலாபநகரத்திலும், இந்துக்கள் குறிப்பிடக் கூடிய அளவு வசிக்கிறார்கள் இவர்களும் ஒரு சபையை நிறுவி சமயத்தை வளர்க்க முன்வந்தது பாராட்டக்குரியது.

உடப்பு மகாவித்தியாலய ஆசிரியர் திரு.ச. கனகசிந்தாமணி சிலாபம் சைவமகாசபை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

அட்வக்கேட் திரு. ஏ. நடராசசுந்தரம் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. தலைவர் பேசுகையில் சைவசமயத்தவர்கள் கட்டுப்பாடுகளுக்கு அமைந்து சாதனை முறைகளைக் கவனிக்காமையினால் சைவசமயம் வளர்ச்சி குன்றி வருவதாகவும் இச்சபையின் வளர்ச்சியில் அங்கத்தவர்கள் அக்கறைகாட்ட வேண்டுமென்றும் கூறினார்.

முன்னேஸ்வரம் அரசினர் தமிழ்ப்பாடசாலை தலைமையாசிரியர் திரு. சி. மூவடப்பன் பேசும்போது கூறியதாவது சிலாபத்தில் முன்பும் சைவசங்கங்கள் இருந்தன. இச்சங்கங்களில் அரசாங்க ஊழியர்கள் முக்கிய உறுப்பினர்களாக இருந்தமையில் அவர்கள் இடமாற்றலாகிச் செல்லும் போது சங்கங்கள் செயலற்று விட்டன. ஆதலால் பல துறைகளிலும் உள்ளவர்கள் நிர்வாக சபையில் அங்கம் வகித்து சங்கத்தை வளர்க்கவேண்டும் ஒவ்வொரு சைவசமயியும் ஒருநாளில் 15 நிமிஷமாவது இச்சங்கவளர்ச்சியில் ஊக்கம் காட்டவேண்டும்.

உத்தியோகத்தர் தெரிவு விபரம்: போஷகர் திரு. சி. பாலசுப்பிரமணியக் குருக்கள், தலைவர் அட்வகேட் திரு. அ. நடராசசுந்தரம் உபதலைவர்கள் திருவாளர்கள் ப. தில்லையம் பலம் டாக்டர் க. இராசரத்தினம் இணைச்செலாளர்கள் திரு. வாளர்கள் த. இராசா எம். மகபதி இணைப்பொருளாளர்கள் திருவாளர்கள் செ. முருகையா ஜெ. நல்லைநாதன்.

50 மாணவர் இரத்ததானம்

உடுவில், செவ்.

யாழ்ப்பாணத்திலுள்ள கனிஷ்ட தொழில் நுட்ப நிலைய மாணவர்கள் நேற்று இரத்ததானம் செய்தார்கள்.

யாழ்ப்பாணம் இரத்தவங்கியைச்சேர்ந்த இரத்ததான அதிகாரிகள் இரத்தம் சேகரிக்கும் முகமாக மேற்படி நிலையத்திற்கு விஜயம் செய்த பொழுது சுமார் ஐம்பதுக்கு மேற்பட்ட இளைஞர்கள் மிக உற்சாகத்துடன் இரத்ததானம் அளித்தார்கள்.

இரத்ததானம் கொடுப்பதில் இந்நிலைய மாணவர்கள் முன்னிப்பதாகவும் அவர்கள் உற்சாகமுடனும் மகிழ்ச்சியுடனும் இரத்தம் கொடுக்க முன்வருவது பாராட்டுக்குரிய செயலென்றும் இரத்தவங்கி அதிகாரி மாணவர்களைப் பாராட்டிக் கூறினர்.

ஆலயப்பிரவேச வழக்கு

குரும்பசிட்டி ஞாயிறு

அச்சுவேலி உலவிக் குளப் பிள்ளையார் ஆலயப்பிரவேச வழக்கு மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது நீதிபதி வழக்கு மேல் விசாரணையை மீண்டும் மார்ச் மாதம் 2-ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.

அச்சுவேலி தெற்கு வாசியான கணேசு என்பவரை கடந்த வருடம் ஆடிமாதம் 12-ம் திகதி மேற்படி பிள்ளையார் ஆலயத்தின் உள்ளே சென்று தரிசிக்கவிடாது தடுத்ததாக காங்கேசன் துறைப் பொலிசாரால் ஆலய முகாமையாளர் ஆர். குமாரவேலு என்பவர்மேல் இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் திரு. ரி. தம்பிரத்தினம் ஆஜரானார் பொலிஸ் தரப்பில் வழக்கை நடாத்த அட்வகேட் எம். ஆலாலசுந்தரம் ஆஜராகியிருந்தார்.

சிறுமிக்கு காயம்

குரும்பசிட்டி, செவ்.

வான் ஒன்றினால் மோதப்பட்டுப் படுகாயங்களுக்குள்ளான 6 வயது சிறுமி ஒருத்தி காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். மயிலிட்டியைச் சேர்ந்த கோசாந்தி என்ற சிறுமியே விபத்துக்குள்ளாகியவர். பிரஸ்தாப விபத்து மயிலிட்டி கடற்கரைத் தெருவில் நடைபெற்றுள்ளது. இது சம்பந்தமாக காங்கேசன் துறைப் பொலிசார் விசாரணை நடத்திலருகின்றனர்.

உருளைக்கிழங்குக்கு ஆபத்து

யாழ்ப்பாணம், புதன்

உருளைக்கிழங்கின் சரியான வயது எல்லை மூன்று மாதமாக இருக்கின்ற போதிலும் வடபகுதியில் சில விவசாயிகள் இதனை இரண்டு மாதத்தில் அறுவடை செய்து கொழும்புக்கு அனுப்பியதால் அங்கு இக்கிழங்குகள் அங்கு அழுகிப்பழுதடைந்து விட்டதாக கமத்தொழில் விவசாயப் பகுதியினர் கவலை தெரிவித்துள்ளனர்.

நமது நாட்டின் பிறநாட்டுச் செலாவணி மிகவும் பாதகமான நிலையிலிருக்கின்ற போதிலும் நாட்டுமக்களுக்கு உணவுப் பொருட்களை கூடிய அளவில் கிடைக்க வேண்டுமென்பதற்காக விவசாயிகளுக்குத் தேவைப்படும் பசளை வகைகள், விவசாயரசாயனப் பொருட்கள் விதை உருளைக்கிழங்குபோன்றவற்றை அரசாங்கம் இற்குமதி செய்தே விவசாயிகளுக்கு வழங்குகின்றதென்றும், இந்நிலையில் நுகர்ச்சியாளருக்கு வேண்டிய தரமான உருளைக்கிழங்கை விற்பனைக்கு ஒப்படைக்கவேண்டியது விவசாயிகளின் கடமையென்றும் கமத்தொழில் இலாகா வெளியிட்டிருக்கும் அறிக்கையொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. [கா. நி]

இ போ.ச.

தலைவருக்கு மகஜர்

உடுப்பிட்டி, செவ்.

'பருத்தித்துறைக்குச்செல்வதற்காக கொழும்பிலிருந்து யாழ்தேவியில் வரும் பிரயாணிகளை ஏற்றிச் செல்வதற்கு கொடிகாமம் புகையிரத நிலையத்திலிருந்து இரண்டு பஸ்வண்டிகள் ஒரே நேரத்தில் புறப்படுகின்றன. இப் பஸ்வண்டியிலொன்றை கிளிநொச்சிப் புகையிரத நிலையத்திலிருந்து புறப்படச் செய்தால் ஆனையிறவு. பருதங்கேணி, முகமாலை, விழுவளை, நாகர்கோவில், எழுதுமட்டுவாள், ஒட்டுவெளி, உசன், மிருசுவில் ஆகிய இடங்களுக்கு பிரயாணம் செய்வோர் அதிக நன்மை பெறுவர்.'

இவ்வாறு கோரும் மகஜரொன்றை வடமராட்சிப் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு. சுந்தரலிங்கம் இ போ.ச. தலைவருக்கு அனுப்பியுள்ளதாக அறியப்படுகிறது.

பேட்டிகாண முடிவு

சுழிபுரம், செவ்.

யாழ்.மாவட்ட சனசமூக சமாஜத்தினர், சனசமூக நிலையங்களில் நன்கொடைப் பணம் சம்பந்தமாக நிலையங்கள் அடையும் கஷ்டத்தை எடுத்து விளக்குவதற்காக அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகராவைப் பேட்டிகாண விருக்கின்றனர்.

சமாஜத் தலைவர் திரு. சி. தியாகராசா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் விரைவில் பேட்டி காண்பதாக தீர்மானிக்கப்பட்டது.

நிரந்தர கட்டடம்

புன்னாலைக்கட்டுவன், செவ்

வடமாகாண விஞ்ஞான ஆசிரியர் சங்கத்துக்கான நிரந்தரக் காரியாலயத்தைக் கொண்ட மண்டபம் ஒன்று யாழ் நகர எல்லைக்குள் கட்டப்படவிருப்பதாகத் தெரிகிறது. இதற்கான நிலம் ஒன்று 99 வருடக் குத்தகைக்கு [illegible] தாகவும், கட்டட வேலை [illegible] கான ஆயத்தங்கள் நடைபெறுவதாகவும் தெரிகிறது.

சந்தேக நபர்கள் கைது; ரிமாண்டில்வைக்க உத்தரவு

குரும்பசிட்டி, செவ்.

சங்கானை நிச்சாமத்திலும், பண்டத்தரிப்பிலும் நடைபெற்ற கோஷ்டிக் கலவரங்கள் சம்பந்தமாக சங்கானைப் பொலிசார் சந்தேகத்தின் பேரில் செல்லமுத்து செல்வரத்தினம், திருவாதிரை, தேவராசா, திருநாவுக்கரசு ஆகிய நான்கு பேரைக் கைது செய்துள்ளனர். இந்நான்கு சந்தேக நபர்களையும் பொலிசார்மல்லாகம் நீதிபதி திரு. எம். சண்முகலிங்கம் முன்னிலையில் ஆஜர் செய்த போது இவர்களை இம்மாதம் 7-ந் திகதி வரை றிமாண்டில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

சந்தேக நபர்களின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் ஆர். ஜே. செல்வரத்தினம் சந்தேக நபர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் நிலையத்தில் வைத்து தாக்கப்பட்டதாக அறிவதாகவும் எனவே இவர்கள் சட்டவைத்திய அதிகாரியின்பரிசோதனைக்கு அனுப்பப்பட வேண்டுமெனவும் நீதிபதியிடம் விண்ணப்பித்தார்.

இக்கோஷ்டிச்சண்டையில் துவக்குச்சூடு பட்டு யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள வன்னியர் குமரேசர்என்பவர் அபாயகரமான நிலையில் உள்ளாரெனத் தெரிகிறது. மற்றும் கே இராஜதுரை, பி. சற்குணம் ஆகிய இருவரும் பலத்தகத்திவெட்டுக்காயங்களுக்கு இலக்காகி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வருடாந்த உற்சவம்

பண்டத்தரிப்பு, செவ்.

இளவாலை - போயிட்டி புனித லூர்துமாதாவின் வருடாந்த உற்சவத்துக்கான நவநாட்கள் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றன எதிர்வரும் 11ம் திகதி திருநாட் பூசையுடனும் திருச்சொரூப சுற்றுப்பிரகாரத்துடனும் உற்சவம் முடிவுறும்.

உற்பத்தி அதிகரிப்பு

பண்டத்தரிப்பு, செவ்

மிளகாய் தட்டுப்பாட்டையொட்டி இம்முறை இப்பகுதிகளில் அதிகமான மிளகாய் உற்பத்தி செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது கள்ளச்சந்தையில் செத்தல்மிளகாய் ஒரு றாத்தல் 8 ரூபா வரை விலை போகிறது.

லிகிதர் வேலை

கொம்பனித்தேரு, செவ்

அரசாங்க இலாகாக்களில் சேவகர்களாக கடமையாற்றும் ஊழியர்களுக்கு இனமேல் லிகிதர் வேலை தட்டெழுத்தாளர் பதவி முதலியன இவர்களின் தகுதிகளுக்கு ஏற்றவகையில்வழங்கப் பட இருக்கின்றன என்றும் அரசாங்கக் காரியாலயங்களில் காலியாகும் இடங்களில் ஐம்பது சத வீதமான இடங்களுக்கு அங்கு கடமையாற்றும் சேவகர்களுக்கும் மிகுதி ஏனையோருக்கும் வழங்கப் படுமென்றும் அறியப்படுகின்றது.

கெயர்மா தாருங்கள்

புன்னாலைக்கட்டுவன், செவ்.

"இலங்கையில்உள்ள சகல பாடசாலை மாணவருக்கும் வழங்கும் கெயர்மாவை, வடபகுதியிலுள்ள தமிழ் பௌத்த பாடசாலையில் பயிலும் மிக ஏழைகளான எமது குழந்தைகளுக்கும் தாருங்கள். ஒதுக்கப்பட்டு, உரிமைகள் இழந்து வாழும் மக்களுக்கு இவ்வித உதவியளிப்பதன் மூலம் இந் நாட்டில் ஜனநாயகம் 'பாரம்பரியங்களைப் பேணி வளர்க்க முடியும்.

இவ்வாறு கரவெட்டி பௌத்த தமிழ்ப் பாடசாலை தலைமையாசிரியர் திரு. க. இராசரத்தினம், இலங்கையிலுள்ள அபெரிக்கஸ்தானி நருக்கு, வடபகுதியிலுள்ள பௌத்த தமிழ்ப் பாடசாலையின் சார்பில் எழுதிய கடிதத்திற் குறிப்பிட்டுள்ளார்.

கி. மு. சங்க உறுப்பினர்

உடுப்பிட்டி, செவ்.

கரணவாய் வடக்கு கிராம முன்னேற்றச்சங்கத்தின் வருடாந்த நிர்வாகசபைப் பொதுக்கூட்டம் கி. மு. ச. மண்டபத்தில் நடைபெற்றது பின்வருவோர் புதிய நிர்வாகிகளாக ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்

தலைவர்: திரு. க. கதிரவேலு, உபதலைவர்: திரு. ஆ. க. மாணிக்கம், காரியதரிசி: திரு. சி. கணேசமூர்த்தி, தனாதிகாரி: திரு. க. சந்தசாமி.

ஒன்பது பேரடங்கிய நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

ஒரு றாத்தல் சீனியில் முப்பத்தைந்து பால்தேநீர்வரை தகாரிக்கலாமென்று ஒரு தேநீர்க்கடை அனுவதஸ்தர் கூறுகிறார்.

இரத்தினக்கல் கடத்தினாராம்

குரும்பசிட்டி, செவ்.

இலங்கையிலிருந்து சட்டவிரோதமாக இரத்தினக்கற்களை வெளிநாட்டுக்கு கடத்திச் செல்ல முயன்ற ஒருவர் மீது பொலிசார் மல்லாகம் நீதிமன்றத்தில் குற்றஞ்சாட்டி வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

கொழும்பைச் சேர்ந்த சேகுதாவுத் முகமெட் றஜாக் என்பவர் கடந்த வருடம் அக்டோபர் மாதம் 30-ம் திகதி ஆயிரம் ரூபா பெறுமதியான இரத்தினக் கற்களை பலாலி விமானநிலையத்திலிருந்து விமான மூலம் கடத்திச் செல்ல முயற்சித்ததாக இவ்வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

நீதிபதி வழக்கு மேல் விசாரணையை பங்குனி மாதம் 19-ந் திகதிக்கு ஒத்திவைத்தார்.

திறப்பு விழா

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை திவ்ய ஜீவன சங்கத்தின் கண்டிக் கிளைக்கான புதிய கட்டடத் திறப்பு விழா நேற்று முன்தினம் கண்டியிலுள்ள திக்கரவெல்ல என்னுமிடத்தில் நடைபெற்றது. இலங்கை இராமகிருஷ்ண மிஷன் தலைவர் திரு. பிரேமானந்தஜீ இதனைத் திறந்து வைத்தார்.

ஆத்மசோதி ஆசிரியர் திரு. முத்தையா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சகல கிளைச் சங்கங்களின் பிரதிநிதிகளும் உட்பட பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர். (காநி)

மீண்டும் ராஜீய தொடர்பு

லண்டன், பெப். 6

ஜெர்மன் ஜனநாயகக் குடியரசும் யூகோஸ்லாவியவும் சென்ற மாதம் 31-ம் திகதி முதல் தமது ராஜீயத் தொடர்புகளை மீண்டும் ஏற்படுத்திக்கொண்டனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ். மத்திய கல்லூரி கிரிக்கெட் போட்டிகள்

யாழ்ப்பாணம், புதன் வடபகுதியிலுள்ள கல்லூரிகளில் கிரிக்கெட் ஆட்டத்தில் சிறந்தவற்றில் ஒன்றாக இருக்கும் யாழ் மத்திய கல்லூரியின் வருடாந்த கிரிக்கெட் ஆட்டம் நேற்று முதல் ஆரம்பமாகியுள்ளது இவ்வருடத்தில் இக்கல்லூரி கலந்து கொள்ளவிருக்கும் போட்டிகள் பற்றிய விபரங்கள் பின்வருமாறு:

இம்மாதம் 11-ந் - 12ந் திகதிகளில் கண்டி திரு சில்வஸ்டாஸ் கல்லூரியுடன் கண்டியில் போட்டி. 14-ந் 15-ந் திகதிகளில் கொழும்பு மாலியதேவா கல்லூரியுடன் கொழும்பில் போட்டி. 19-ந் 20 ந் திகதிகளில் சம்பாதிசிரியார் கல்லூரியுடன் போட்டி. 25-ந், 26-ந் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியுடன் போட்டி.

மார்ச் மாதம் 4-ம் 5-ம் திகதிகளில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியுடன் போட்டி. 11-ம், 12-ம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரியுடன் போட்டி. 19-ம், 20-ந் திகதிகளில் யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியுடன் மத்திய கல்லூரி மைதானத்தில் சம்பியன் போட்டி நடைபெறும். 26-ம், 27-ம் திகதிகளில் மானிப்பாய் இந்துக்கல்லூரியுடன் போட்டி. ஏப்ரல் மாதம் 3-ம், 4-ம் திகதிகளில் கொழும்பு ரோயல் கல்லூரியுடன் போட்டி. (கா. நி)

தெல்லிப்பழை கோஷ்டி வெற்றி பெற்றது

குரும்பசிட்டி, செவ். யாழ்ப்பாணம் கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகத்திற்கும் தெல்லிப்பழை ஒலிம்பிக்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்ட மோதலில் தெல்லிப்பழைக் கோஷ்டி 4—2 கோல்களால் எதிர்கோஷ்டியைத் தோற்கடித்தது.

இடைவேளையின் போது இருதரப்புக் கோஷ்டிகளும் தலா ஒவ்வொரு கோல்போட்டிருந்தன. தெல்லிப்பழைக் கோஷ்டி சார்பில் கணேசலிங்கம் கோலினை விளாசியிருந்தார். கோல் காப்பு வீரரின் கவலையீனத்தால் இக்கோல் போக முடிந்தது. இடைவேளைக்குங்பின் தெல்லிப்பழை மூன்று கோல்களையும், யாழ்ப்பாணம் ஒரு கோலையும் போட்டுக்கொண்டன.

வலி. வடக்குக் காரியாதிகாரி பிரிவு சுதந்திரதின விழாச் சபையினரின் ஆதரவில இப்போட்டி தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. திரு. எம். சுப்பிரமணியம் இவ்வாட்டத்திற்கு மத்தியஸ்தம் வகித்தார்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி வெற்றி

குரும்பசிட்டி, செவ் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியும் கலந்து கொண்ட முற்பிரிவு சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் இந்துக்கல்லூரி வீரர் மிகத் திறமையாகத் துடுப்பெடுத்தாடி 125 மேலதிக ஓட்டங்களால் வெற்றி பெற்றனர். இவ் ஆட்டம் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்துக் கல்லூரியினர் தமது எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 249 ஓட்டங்களை எடுத்தனர். இதில் சின்னராஜா என்ற வீரர் தனித்து 93 ஓட்டங்களைக் கைப்பற்றினார். மகாஜனக் கல்லூரி வீரர் ஆட்டமிழக்கையில் 181 ஓட்டங்களைப் பெற்றிருந்தனர். தொடர்ந்து இரண்டாம் இன்னிங்ஸ் ஆடிய இந்துக் கல்லூரி 187 ஓட்டங்களை அடித்துக் கொண்டது. மகாஜனா வீரர் தமது இரண்டாம் இன்னிங்ஸில் 130 ஓட்டங்களை பெற்றுக் கொண்டனர் மகாஜனாக்கல்லூரி காப்டன் சிறீகாந்தா தமது கோஷ்டி சார்பில் 41 ஓட்டங்களை அடித்துக் கொடுத்தார்.

வெற்றி தோல்வி இல்லை

குரும்பசிட்டி, செவ். குரும்பசிட்டி உதயதாரகை விளையாட்டுக்கழகத்திற்கும் வர்த்தலைவிளான் வாலிபர் சங்கத்திற்குமிடையில் நடந்த சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டி நேரம் போதாமையால் எவருக்கும் வெற்றிதோல்வியின்றி முடிந்தது. குரும்பசிட்டி கோஷ்டி தமதுமுதல், இரண்டாம் இன்னிங்ஸ்களில் முறையே 83, 93 ஓட்டங்களைப் பெற்றது. இவ் ஆட்டம் கட்டுவன் மைதானத்தில் நிகழ்ந்தது.

வளர்பிறை வெற்றி

முல்லைத்தீவு, செவ் முல்லைத்தீவு வளர்பிறை விளையாட்டுக் கழகத்திற்கும் அம்பலவன் பொக்கணை ஸ்ரீ பண்டாரவன்னியன் சனசமூக நிலையத்துக்குமிடையே நடந்த கிளித்தட்டுப் போட்டியில் முல்லைத்தீவு வளர்பிறை விளையாட்டுக்கழகம் 8—4 ஆட்டங்களால் வெற்றி பெற்றது திரு ம. செபமாலை மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

விளையாட்டுக் கழக கூட்டம்

வவனியா, செவ்வாய் வவனியா மாவட்ட ஜெற்லயினேஸ் விளையாட்டுக்கழகத்தினரின் அங்குராப்பணக் கூட்டம் நடைபெற்ற போது விளையாட்டு அதிகாரி திரு. புவனசுங்கம் கலந்து கொண்டார்.

தலைவராக திரு. ரி, கே. வில்வராசா தெரிவு செய்யப்பட்டார், உப தலைவராக திரு. கே. சேனாதிராசாவும், காரியதரிசியாக திரு. சி. நிமிலராசாவும், உபகாரிய தரிசியாக திரு. ரி லேனாட்டும் தனாதிகாரியாக திரு இராசநாயகமும் உப தனாதிகாரியாக திரு. தவராசாவும் தெரிவுசெய்யப்பட்டார்கள்

இளம்பெண் குத்திக் கொலை

புத்தளம். செவ். பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தன்னைச் சிலர் கொலைசெய்ய முயலுகிறார்கள் என்று புகார் தெரிவித்த திரு மணமான எஸ் எம். நான்ஸி ஜூலியட்என்ற இளம்பெண் நான்கு மணித்தியாலத்திற்குப் பிறகு [illegible] குள்ளாகிப் [illegible] தார். புலன்விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

வானொலி நிகழ்ச்சிகள் இலங்கை

செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00

344 மீற்றர் & 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவ நற்சிந்தனை, 6-40 இஸ்லாமிய நற்சிந்தனை -45 துதிப்பாடல், 7-25 திசைக்குறிப்பு, 7-30 தேர்ந்த இசை, 8-5 இஸ்லாமிய கீதங்கள்.

344 மீற்றர் & 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

344 மீற்றர் & 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும் பயிர்.

இரவு 6-1 சங்கீத பாராயணம், 6-30 விளையாட்டு லகை சுற்றி, 6-45 பாவளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-0 விவேகச்சக்கரம் இல. —57 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 செய்தச் சுருள். 9-45 நாகசுரம்.

சென்னை 1

காலை 6-00 வந்தே மாதரம், 6-05 துதிப்பாடல்கள், 6-30 நிகழ்ச்சிக் குறிப்புகள், 6-35 அருள் வாக்கு, 6-40 ஆங்கிலத்தில் செய்தி, 7-00 தமிழில் செய்தி, 7-30 பாமாலை, 8-15 திரைகானம், 10-15 ஆங்கிலத்தில்செய்தி, 11-55 பிராந்திய செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 கல்வி ஒலிபரப்பு, 1-00 பெண்ணுலகம், 1-45 திரைகானம், 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-30பாற்பயிற்சி, 5-45 மெல்லிசை, 6-05பிராந்திய செய்திகள்.

இரவு 6-30 வாத்திய கோஷ்டி, 6-45திரைகானம், 7-15 தமிழில் செய்தி, 7-30 நம்விவசாயிகளுக்கு 8-45 ரேடியோ செய்திமலர், 9-00 ஆங்கிலத்தில் செய்தி, 10-00 திரைகானம்.

திருச்சி 1

காலை 6-30 வந்தே மாதரம், 6-40 நிகழ்ச்சி குறிப்புகள், 7-00 துதிப்பாடல்கள், 7-15 தமிழில் செய்தி, 7-30 இசைமாலை 8-00 ஆங்கிலத்தில் செய்தி, 11-05 பிராந்திய செய்திகள்.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 பெண்ணுலகம், 1-50 இசை மஞ்சரி, 2-00 தமிழில் செய்தி.

மாலை 5-00 திரைப்பட இசை, 6-05 பிராந்திய செய்திகள்.

இரவு 6 30 ஊர்ச்சாவடி, 6-35 நாட்டுப் பாடல்கள், 7-15 தமிழில் செய்தி 7-30 விவசாயிகளுக்கான நிகழ்ச்சி 9-00 ஆங்கிலத்தில் செய்தி.

தொழிலாளர் கோஷ்டி வெற்றி

காங்கேசன்துறை, செவ் காங்கேசன்துறை சீமெந்துத்தொழிற்சாலை கோஷ்டிக்கும் தையிட்டி இளைஞர் விளையாட்டுக்கழகத்திற்குமிடையில் காங்கேசன்துறை பட்டினசபை விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில் சீமெந்துத் தொழிற்சாலைக்கோஷ்டி 1—0 கோலால் வெற்றியீட்டியது. மத்தியஸ்தராக திரு. தம்பித்துரை கடமையாற்றினார்

இறுதிப் போட்டி

ஊர்காவற்றுறை, செவ் லைடன் வெற்றிக்கேடயத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி இம்மாதம் 13-ம் திகதிநடைபெறவிருக்கிறது ஊர்காவற்றுறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்திற்கும் தடற்படை கோஷ்டிக்கும் இடையே இப்போட்டி நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'விநோத' உதைபந்தாட்டப் போட்டி

மத்தியஸ்தர் 'நாதஸ்வரவித்துவான்'

— நமது விளையாட்டு நிருபர் —

யாழ்ப்பாணம், புதன் மோதினார்கள்.

யாழ்ப்பாணத்தின் சுதந்திரதினக் கொண்டாட்டத்தையொட்டி யாழ்ப்பாணம் விளையாட்டரங்கில் யாழ்ப்பாணத்தில் முதல் தடவையாக நடைபெற்ற வினோத உடை உதைபந்தாட்டம் மக்களை குதூகலத்தில் ஆழ்த்தியுள்ளது.

ஒவ்வொரு வேடம்தரித்து கலந்துகொண்ட இந்த சிரிப்பான உதைபந்தாட்டப் போட்டியில் குருநகர் புனிதவளன் விளையாட்டுக் கழகமும் நாவாந்துறை சென் மேரிஸ் உதைபந்தாட்டக்கழகமும் போட்டியிட்டன. யாழ்ப்பாண விளையாட்டதிகாரி திரு. என், தேவபாலன் நாதஸ்வர வித்துவான் வேடம் பூண்டு மத்தியஸ்தம் வகித்து ரசிகர்களை வயிறு குலுங்க சிரிக்கலைத்தார்.

இந்த ரசிப்பான போட்டி ஆரம்பத்திலிருந்து முடியும் வரையும் விறுவிறுப்பாகவும் அதனால் ரசிகர்களுக்கிடையே ஒரு பரபரப்பாகவும் காணப்பட்டது.

வேடர்களாகவும் ஆஸ்பத்திரி நேசுகளாகவும் ரோமப் போர் வீரர்களாகவும் பைத்தியக்காரர்களாகவும், கவுண் அணிந்த கட்டளகிகளாகவும் காற்சட்டையணிந்த கனவான்களாகவும் வேடம் தாங்கிய வீரர்கள் இப்போட்டியில் விட்டுக் கொடுக்காமல் குறிப்பாக கட்டழகி வேடம் தரித்தவர்கள் காற்சட்டைக் கனவான்களை சிறந்த பாசிங் ஆட்டத்தின் மூலம் திணறடித்துக்கொண்டிருந்தார்கள். அரர்பியவேடம் தரித்த தேவதாஸ் இன்ஸ்பெக்டர் வேடம் தரித்த எஸ், சின்னத்துரை போதகர் வேடம் தரித்த எஸ். யேசுதாசன் ஆகியாரின் ஆட்டம் அருமையாக இருந்தது.

நேஸ் வேடம் தரித்தவருடைய தலை அடிப் பந்துகள் ரசிகர்களை பிரமிக்க வைத்தன. இப்போட்டியில் சென் மேரிஸ் கோஷ்டி 3 கோல்களை பெற்றது. வினோத உடைப் போட்டியையே முக்கியமாகக் கொண்ட இப் போட்டியில் நேஸ் பொலிஸ் இன்ஸ்பெக்டர் நாதஸ்விர வித்துவான் ஆகியோர்களுக்கு முறையே பரிசில்கள் வழங்கப்பட்டது காரியாதிகாரி திரு பிள்ளைநாயகம் பரிசில்களை வழங்கினார்

கரவெட்டி கோஷ்டி வெற்றி

உடுப்பிட்டி, செவ்வாய் வடமராட்சிக் காரியாதிகாரி பிரிவுச் சுதந்திரதின விழாவைமுன்னிட்டுக் கரவெட்டி விக்னேஸ்வராக கல்லூரி விளையாட்டு மைதானத்தில் கரவெட்டி ஸ்பேஸ் விளையாட்டுக் கழகத்திற்கும் கிராவளை சுடரொளி விளையாட்டுக் கழகத்திற்குமிடையே ஏற்பட்ட கைப்பந்தாட்ட மோதலில் முதலாம்பிரிவுப் போட்டியில் கரவெட்டி ஸ்பேஸ் 15 - 13 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. இரண்டாம் பிரிவுப் போட்டியில் கிராவளை சுடரொளி 15 - 9 ஆட்டங்களால் கரவெட்டியைத் தோற்கடித்தது, மூன்றாம் பிரிவுப் போட்டியில் கிராவளை சுடரொளி 15 - 14 ஆட்டங்களால் வெற்றியீட்டியது. கிராவளை சுடரொளி கோஷ்டியினர் இம்மோதலில் இரு ஆட்டங்களில் வெற்றியீட்டியதால் தெரிவு செய்யப்பட்டனர்

இப்போட்டிக்கு திரு சிதம்பரநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

குரும்பசிட்டி வெற்றி

குரும்பசிட்டி, செவ் குரும்பசிட்டி உதயதாரகை இளைஞர் சங்கத்தினரும் ஊரங்குனை விவேகனந்தா விளையாட்டுக்கழகத்தினரும் கலந்துகொண்ட சினேகபூர்வமான இரண்டாம் பிரிவு கிரிக்கெட் போட்டியில் குரும்பசிட்டி கோஷ்டியினர் 83 ஓட்டங்களால் வெற்றியீட்டினர் இவ் ஆட்டம் குரும்பசிட்டி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய குரும்பசிட்டிக் கோஷ்டி வீரர் எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 55 ஓட்டங்களை எடுத்தனர். ஊரங்குனை கோஷ்டி வீரர்கள் தமது முதலாம் இரண்டாம் இன்னிங்ஸில் முறையே 21, 25 ஓட்டங்களை மட்டும் கைப்பற்றினர். தொடர்ந்து தமது இரண்டாம் இன்னிங்ஸில் குரும்பசிட்டி வீரர் திறமையாக துடுப்பெடுத்தாடி 74 ஓட்டங்களை எடுத்துக் கொண்டார்.

சிரமதானம்

ஊர்காவற்றுறை, செவ். தீவுப்பகுதி பாடசாலைகளில் கடந்தவாரம் சிரமதானம் அனுஷ்டிக்கப்பட்டது. மாணவர்கள் பாடசாலை சுத்திகரிப்பு வேலைகளில் ஈடுபட்டனர்.

ஜெனரல் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்
பழைய டயர்களை புதுப்பிக்கும்
வேலைகளுக்கும்
சகலவிதமான
ரப்பர் சாமான்களுக்கும்
தொழில் நிலையங்களுக்குத் தேவையான
தற்காலிக கட்டட தளபாடங்கள்
ஆகியவற்றுக்கும்
எம்முடன்தொடர்பு கொள்ளுங்கள்
20, ஸ்ரான்லி வீதி — யாழ்ப்பாணம்
45, அம்பலவாண றோட்,
யாழ்ப்பாணம்
போன்: 7024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பழைய பல்லவி வேண்டாம் புதிய நோக்கு தேவை"

நகரசபைத் தலைவர் யோசனை

திருக்கோணமலை, நிரு.

"இருபது ஆண்டுகளுக்கு முன் இலங்கை மக்களின் வாழ்வியலே புதிய அத்தியாயம் தோன்றியது இனியும் பழைய பல்லவியைப்பாடிக் கொண்டு தவறான பாதையில் மக்களை வழிநடத்த எவரும் முனைவது தவறாகும்" என்று திருமலை நகரசபைத் தலைவர் டாக்டர் எஸ். சிவானந்தன் திருமலையில் நடைபெற்ற சுதந்திரதினக் கொண்டாட்டத்தின் பின் தெரிவித்தார்.

"கறுப்புக்கொடிகளும் சத்தியாக்கிரகமும் மக்கள் மத்தியிலமைப்பில்லாமல் போய்விட்டன. இவற்றின் நோக்கம் உயர்ந்ததாக இருந்தாலும் அவற்றின் அடிப்படை ஒன்றாக இருந்தாலும் அடையும்வழி வேறாக இருக்கின்றது. இந்த நோக்கத்தையும் கொள்கையையும் மாற்றியமைக்கவேண்டியது அவசியமென்பதை சுதந்திரதினக்கொண்டாட்டம் உணர்த்திவிட்டது" என்று டாக்டர் சிவானந்தன் மேலும் தெரிவித்துள்ளார்.

சிறு சிறு தவறுகளைப் பெரிதுபடுத்தி உருவாகி வரும் தேசிய ஒற்றுமையை குலைக்கச் சிலர் முனைகின்றனர். முன்னேயை தவறுகளை உணர்ந்து நிலைமையை உத்தேசித்து நடந்துகொள்ளவேண்டியது அவசியமென்றும் அவர் கூறியுள்ளார்.

நகரசபை அங்கத்தவர்களுள் ஒருவரான திரு. பா. நேமிநாதன் அபிப்பிராயம் தெரிவிக்கையில். சுதந்திரதினவிழா தமிழ் மக்களால் மனப்பூர்வமாகக் கொண்டாடப்படவில்லையென்றும் அரசாங்கமே கொண்டாடியதென்றும் தெரிவித்துள்ளார்.

திருமலை இந்துக்கல்லூரி மண்டபத்தில் விவசாயத்தொழில் பொருட்காட்சியை பிரதமர் திறந்து வைத்தார். "நாட்டில் பணியையும் பட்டினியையும் போக்கி வளமும் செழிப்பும் ஏற்பட மக்களை உழைக்க வேண்டும்" என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இத்தகைய பொருட்காட்சிகள் அடிக்கடி நடைபெறவேண்டும் என்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.

தலைமறைவாக இருந்த நபர் பொலிஸில் சிக்கினார்

வவுனியா, செல்வாய்

பொலிசாருக்கு டிமிக்கி கொடுத்து வந்த நபர் ஒருவர் டம்புல்லை மாவட்டத்தைச் சேர்ந்த கொக்கறல்லை என்னும் இடத்தில் பாழடைந்த வீட்டில் பிடிபட்டார்.

இவரை வவுனியா பொலிசுக்கு சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் திரு. சி. நடராஜா கைதுசெய்து குருநாகல் மாஜிஸ்திரேட் முன் ஆஜர் செய்தார் அவரை நிமாண்டில் வைக்கும் படி நீதிபதி உத்தரவிட்டார்.

இவர் அனுராதபுரம், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய கோடுகளிலும்வேறு இரண்டு நீதிமன்றங்களிலும்முறையே 5000, 1000, 5000, 1000, 3000 ரூபா பிணையில்சென்று இறுதியில் தலைமறைவாகத் திரிந்தவராம்.

ஆனையிறவில் தாமதத்தால் மீனவர்கள் நஷ்டம்

காங்கேசன்துறை, செவ்.

ஆனையிறவு கடைமுகாமில் மீன்லொறிகள் பல மணிநேரம் சோதனைசெய்யப்படுவதால் மீனவர்களுக்கு பலலட்சம் ரூபாநஷ்டம் ஏற்படுவதாக கூறப்படுகிறது.

வடபகுதியில் மீன்பிடிக்கூடிய இடங்களாகிய மயிலிட்டி, பருத்தித்துறை, யாழ்ப்பாணம், தாளையடி பகுதியிலிருந்து செல்லும் மீன்லொறிகளே இவ்விதம் பரிசோதனையிட்டதால்பல்லட்சம் ரூபா மீனவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதாம்.

கள்ளக்கடத்தல்சந்தேகத்தைத் தொடர்ந்து பொலிசாரால் இவ்விதம் சோதனை விடப்பட்டதாகத் தெரியவருகிறது. இவ்விதசோதனை தொடர்ந்து நடைபெறுமானால் வடபகுதியிலிருந்து கொழும்புக்குஐஸ்மீன் செல்லமாட்டாதென லொறிமுதலாளி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

பல லட்சரூபா பெறுமதியுள்ள மீன் செல்லும் இந்த ஐஸ் மீன் லொறிகளை சோதனை யிட இரண்டு மூன்று மணித்தியாலம் செல்லுமெனவும் இதனால் அடுத்த நாள்காலை கொழும்பு மீன் மார்க்கட்டுக்குறிப்பிட்ட நேரத்தில் செல்லமுடியாமற் போவதால் பலலட்சம் ரூபா நஷ்டமேற்படுவதாகவும் தெரியவருகிறது.

இவ்விதசோதனை ஏழை மீனவர்களைத்தான் பாதிக்குமெனவும் குறைதெரிவிக்கப்பட்டுள்ளது.

இங்கிருந்து இரவு 10 மணியளவில் செல்லும் ஐஸ் மீன் லொறிகள் அடுத்தநாள்காலை 5 மணிக்கு கொழும்புமீன்மார்க்கட்டில் நிற்கவேண்டிய நிலையிலிருக்கையில் ஆனையிறவு கடைமுகாமில் இரண்டு மூன்று மணித்தியாலங்கள்சோதனையிட்டுச்செலவதால் நேரம் தாமதமாகிவிடுவதுடன் இங்கிருந்து ஐஸ்போட்டு செல்லும் மீன்களை ஆனையிறவில் வைத்துப்பிரித்துப் பார்ப்பதால் மீன்கள் பதம்கெட்டுவிடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தண்டனை நிறைவேறியது

யாழ்ப்பாணம், செவ்.

உயர்நீதிமன்றத்தால் கதிரவேலு காளிமுத்து விற்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை, கடந்தமாதம் 31-ந் திகதி போகம்பர சிறைச்சாலையில் நிறைவேற்றப்பட்டது.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் நிறுவனத்தார் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அலுவலகத்தில் 1968-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7-ம்திகதி வெளியிடப்பட்டது.

நவீன விளையாட்டு அரங்கு

அனுராதபுரம், செவ்

அனுராதபுரத்தில்பொது விளையாட்டு அரங்கை ஓர் நவீன விளையாட்டரங்காக மாற்றுவதற்கு இதுவரை சுமார் 3லட்சம் ரூபா சேர்ந்துள்ளதாக தெரியவருகிறது. வடமத்தியமாகாணத்திலேயே ஒர்சிறந்த விளையாட்டரங்காக இதுஅமைவதால் சகல போட்டிகளும் இங்குநடைபெறும்.

பெற்றோர் ஆசிரியர் சங்கம்

வவுனியா, செவ்

வவுனியாப் பகுதிபூவரசங்குளம் அரசினர்தமிழ்கலவன் பாடசாலையின்புதியதலைமை ஆசிரியர் திரு. சி. நாகலிங்கம் தலைமையில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஒன்று புனருத்தாரணம் செய்யப் பட்டது. புது வருட உத்தியோகஸ்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு. சி.நாகலிங்கம், உப-தலைவர் திரு. கா.தம்பிராசா, காரியதரிசி திரு. இ. கந்தையா, தணிகாரி திரு. நா. இலட்சுமணன்.

வவுனியாவில்மலேரியா

வவுனியா, செவ்

வவுனியாவில் காட்டுதீ போல மலேரியா பரவி வருகின்றது. இது வரை சுமார் 60க்கு மேற்பட்டவர்கள் மலேரியாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். முதலில் காட்டுப் பக்கத்தில் ஆரம்பித்த இந்நோய் நகரத்தையும் பாதிக்கத்தொடங்கிஉள்ளது

இதனைத் தடுப்பதற்கு உதியோகஸ்தர் அதிகவனம் எடுத்துள்ளனர்.

பௌத்த பாடசாலைகள்

உடுப்பிட்டி, செவ்.

வடபகுதியில் அல்வாய், கரவெட்டி, புத்தூர், பூநகரி ஆகிய இடங்களிலுள்ள தமிழ்-சிங்களபௌத்த பாடசாலைகளை அரசாங்கம் பொறுப்பேற்கா விட்டால், இப்பாடசாலைகளை அகில இலங்கைப் பௌத்தகாங்கிரஸ் மகாசபை தனதுபொறுப்பில் எடுத்து நடாத்தத் தீர்மானித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த இரு வருடகாலமாக வடபகுதியில் ஆரம்பிக்கப்பட்டு இயங்கிவரும் இத் தமிழ்-சிங்கள பௌத்த பாடசாலைகளில் ஆசிரியர்கள் சம்பள மின்றிப்படிப்பிப்பதோடு தங்கள் செலவுகளிலேயே, பாடசாலைபிள்ளைகளுக்கு மதிய உணவான பணிசும் வழங்கிவருகின்றனராம். இப்பாடசாலைகள் சில வற்றிற்குக் கல்வி அதிகாரிகள் விஜயம் செய்வது குறிப்பிடத்தக்கது

துண்டுப்பிரசுரம்..

[1ம்பக்கத் தொடர்ச்சி]

டுப் பிரசுரங்களையும் லெசன்ஸ் இல்லாத ரேடியோ ஒன்றையும் காங்கேசன்துறையில் காட்டடைப்பு வீதியில் ஆறுமுகம் சந்தையா என்பவரது வீட்டில் கைப்பற்றினர்.

இத்துண்டுப் பிரசுரங்களை உணர்ச்சியைத் தூண்டும்வகையில் கம்யூனிஸ்ட் கட்சி அச்சடித்து வெளியிட்டதாகத் தெரிகின்றது. கைது செய்யப்பட்ட சந்தேகநபரான ஆறுமுகம் சந்தையாவை பொலிசார் ரூபா 250 பிணையில் விடுதலைசெய்து இம்மாதம் 11-ந் திகதி மல்லாகம் கோர்ட்டில் ஆஜராகும்படி உத்தரவிட்டனர்.

செய்திச் சுருக்கம்

தி. மு. க. தீர்மானம்

காழ்ந்தோர் உயர்ந்தோர் என்ற பாகுபாட்டையகற்றி மக்கள் சமத்துவமாக வாழ ஏற்படுத்தப்பட்டுள்ள சட்டத்தை தீவிரமாக அமுல் நடத்தவேண்டுமென அரசாங்கத்தை கோருவதென இலங்கை திராவிட முன்னேற்றக் கழகம் தீர்மானித்துள்ளது.

கடைகள் நாசம்

நாரஹேன்பிட்டி லோசன வீதியிலுள்ள ஆறுகடைகள் தீயினால் சனியன்றிரவு எரிந்து நாசமாயின. இது நாரஹேன்பிட்டி அண்மைக் காலத்தில் ஏற்பட்ட ஐந்தாவது பெருந் தீவிபத்தாகும்.

சிக்கன முறையில்

இவ்வருடம் சுதந்திரதின விழாக்கள் காலியில் சிக்கன முறையில் நடைபெற்றன. கோயில்களிலும் தேவாலயங்களிலும் மணிகள் அடிக்கப்பட்டன. மாணவர்களின் அணிவகுப்பு மரியாதைகள் நடைபெற்றபின் விளையாட்டு போட்டிகள் இடம் பெற்றன

மேலதிக நேரவேலை

கொழும்புத்துறைமுகத்திலுள்ள கப்பல்களிலிருந்து எண்ணெய் இறக்குவதில் மட்டும் மேலதிக நேரவேலை செய்யுமாறு இலங்கைப் பெற்றோலியம் கார்ப்பரேஷனிலுள்ள யூனியன்கள் தனது அங்கத்தவர்களைக் கேட்டுள்ளன.

கார் திருட்டு

கொழும்பு நகரில் புஹாரி ஹோட்டலின் முன் நிறுத்தப்பட்டிருந்த கார் ஒன்று திருடப்பட்டுள்ளது. இக்கார் தெஹிவலையைச் சேர்ந்த டி. எல். அத்தபத்துக்கு சொந்தமானதாகும். பொலிஸார் புலன்விசாரணைசெய்து வருவதாகப் பொலிஸ் தலைமைக் காரியாலயம் தெரிவித்துள்ளது.

கணவன் தற்கொலை

கட்டிய மனைவி கணவனுடன் சென்று வீடுசெல்ல மறுத்தாளாம். இதனால் மனமுடைந்து கணவன் விஷம் அருந்தி உயிரை மாய்த்துக் கொண்டாராம். இப்பரிதாபச் சம்பவம் வாரியாபொலைப் பொலிஸ் பகுதியில் நடைபெற்றது. சீமான் பெரேரா என்றழைக்கப்படும்மேற்படிகாலஞ்சென்ற நபரது மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. கலேகம் விசாரணை நடத்தினார். விசாரணையின்பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

500 ஆசிரியர் நியமனம்

மேமாதம் முதல் 500 ஆசிரியர்களை புதிதாக ஆசிரிய சேவைக்கு சேர்த்துக்கொள்ள கல்வி அமைச்சர் திரு. ஐ. ம. ஆர். ஏ. இரியகொல தீர்மானித்து இருப்பதாக தெரியவருகிறது. தமிழ், சிங்கள ஆசிரியபரீட்சைகளில் ஆசிரிய தராதரம் பெற்றவர்களே இவர்கள். இவர்களுக்கான இறுதிநேர்முகப் பரீட்சை இப்பொழுது கல்வி அமைச்சினால் நடைபெற்றுவருகிறது.

50 ஆயிரம் ஏக்கரில்

இம்முறை முழுஅநுராதபுர மாவட்டத்தில் பெரும்போகத்தின்போது சென்றமுறையைவிட ஐம்பது ஆயிரம் ஏக்கரில் அதிகமாக விவசாயம் செய்யப்படுமாம். அநுராதபுர மாவட்டத்தில் ஒரு லட்சத்து ஐம்பதினாயிரம் ஏக்கர் நிலத்தில் விவசாயம் செய்யலாம் ஆனால் சென்றமுறை தொண்ணூறு ஆயிரம் ஏக்கர் நிலத்தில் மட்டுமே விவசாயம் செய்யப்பட்டது.

அகில இலங்கை முஸ்லிம் லீக் ஹஜ் குழுவினால் ஏற்பாடுசெயப்பட்ட இரண்டாவது ஹஜ் யாத்திரிகர்கள் கூட்டம், இம்மாதம் 20-ம் திகதி புனிதமக்கா நோக்கிச் செல்லும்.

ஒரு நற்செய்தி

தமிழிலும் ஆங்கிலத்திலும்
சகலவித அச்சு வேலைகளும்
செய்வதற்கு

ஈழநாடு அச்சகம்

பூரணமான நவீன சாதனங்களைக்
கொண்டுளளது என்பதை
மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சகலவேலைகளும் திருப்திகரமாகவும்,
சிறப்பாகவும் குறித்த நேரத்தில் செய்து
கொடுக்கப்படும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்

ஈழநாடு லிமிட்டெட்,
63; சிவன்கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 389

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org